Registered as a news paper 7/01/2004 பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல் & மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி, (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.
❖ பல் கட்டுவதற்கும்,
❖ பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
❖ இலவச கண் பரிசோதனை செய்து, நவீனரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.
(1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மார்கழி 20 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஃதா 11 (04.01.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ் : 95

## கருத்து வேறுபாடுகளை களையுமாறு

# அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் சந்திரிகா - ரணில் மீது அழுத்தம்!

(கொழும்பு)

**இரண்டு தசாப்தங்களாக நடைபெற்றுவந்த போரை முடிவுக்கு கொண்டுவர ஜனாதிபதி சந்திரிகாவும், பிரதமர் ரணிலும் தமக்கிடையே உள்ள வேறுபாடுகளை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என அமெரிக்காவின் பாதுகாப்புச் செயலர் கொலின் பவல் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் நேற்றுமுன்தினம் அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாக, கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரக பொதுமக்கள் விவகார ஆலோசகர் புருஸ் லொகூவ் தெரிவித்தார்.**

தற்போதைய ஸ்தம்பித நிலையினை இரு தலைவர்களும் உடனடியாக முடிவுக்கு கொண்டுவருவதற்கான முன்னெடுப்பில் ஈடுபட வேண்டுமென கொலின் பவல் தனது கடிதத்தில் கேட்டுக்கொண்டதாகவும் - லொகூவ் தெரிவித்தார்.

அத்துடன், தற்போதைய அரசியல் நெருக்கடி தொடர்வதனை அனுமதிக்கமுடியாதெனவும் - கொலின் பவல் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்க பிரதிப்பாதுகாப்பு செயலர் றிச்சட் ஆர்மிடேஜ் இலங்கையின் அரசியல் நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக நோர்வே, ஜப்பான் மற்றும்

(12 ஆம் பக்கம் பார்க்க)



# நோர்வே வெளியுறவு அமைச்சரை மிலிந்த இன்று சந்தித்து பேசுவார்

(கொழும்பு)

கைத்தொழில் விஞ்ஞான அமைச்சரும், அரசதரப்பு சமாதானப் பேச்சுவார்த்தைக் குழுவின் முக்கிய பிரமுகருமான மிலிந்த மொறகொட தலைமையிலான குழுவினர் கடந்த வெள்ளிக்கிழமை நோர்வே தலைநகர் ஒஸ்லோவுக்கு சென்றனர்.

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சனை இவர்கள் இன்று சந்தித்து கலந்துரையாடலை நடத்தவுள்ளனர்.

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை முன்கொண்டு செல்லுதல் மற்றும் ரோக்கியோ மாநாட்டில் வழங்குவதற்கு உறுதியளிக்கப்பட்ட நிதியுதவிகளைப் பெற்றுக்கொள்ளுதல் போன்றவற்றை மையப்படுத்தியே இந்தக் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இந்தச் சந்திப்பின் பின்னர் சமாதான முயற்சியில் பங்குகொண்டுள்ள மற்றைய தரப்பினரையும் மொறகொட சந்திக்கவுள்ளார்.

இதேவேளை, நோர்வே பயணத்தை முடித்துக்கொண்டு கொழும்பு திரும்பும் வழியில் இந்தியா செல்லவுள்ள அமைச்சர் - இந்தியத் தலைவர்களுடன் இலங்கையின் தற்போதைய அரசியல் நிலை தொடர்பாக பேச்சுவார்ததை நடத்துவார் எனத் தெரிவிக்கப்பட்டபோதும் இதனை உறுதிசெய்யமுடியவில்லை. (01)

## சமாதான முயற்சிக்கு விசேட பூஜை வழிபாடு!

(கொழும்பு)

ஸ்தம்பிதம் அடைந்துள்ள சமாதானப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்படுவதற்கும், சம்பந்தப்பட்ட தரப்புக்கள் சமாதான செயற்பாட்டில் ஈடுபடுவதற்கும் அரசாங்கத்தினால் விசேட பூஜை ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இரண்டு வருடங்கள் நிறைவடையும் நிலையில்- சமாதானப் பேச்சுக்கள் ஸ்தம்பிதமடைந்துள்ளன. மீண்டும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு இவ் விசேட

(12 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். இராணுவத் தளபதிக்கு புலிகள் கொலை மிரட்டலாம்!

## கொழும்பு ஊடகம் தகவல்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளால் தனக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து, யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால போர்நிறுத்தக் கணகாணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்தில் முறைப்பாடொன்றை செய்துள்ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்த ஊடகம் மேலும் தெரிவிக்கையில், பொதுமக்களுடன் நெருக்கமாகப் பழகுவதைத் தொடர்ந்தால், தான் கொல்லப்படுவேனென சாவகச்சேரியில் நடந்த கூட்டமொன்றில் விடுதலைப் புலிகளின் பிரமுகர் ஒருவர் அச்சுறுத்தும் பாணியில் பேசியதாகத் தெரிவித்தே சந்திரபால இந்த முறைப்பாட்டை தெரிவித்தார்.

இவரது முறைப்பாட்டில், பொதுமக்களுடன்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வட - கிழக்கு மாகாணசபைக்கு தேர்தல் நடத்தக் கோரிக்கை!

## ஜனாதிபதி - பிரதமருக்கு முஸ்லிம் காங்கிரஸ் கடிதம்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாண சபைக்கான தேர்தல் ஏன் ஒத்திவைக்கப்பட்டு வருகிறது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடமும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடமும் சிறிலங்கா முஸ்லீம் காங்கிரஸ் கேள்வி எழுப்பியிருக்கிறது.

இது தொடர்பாக முஸ்லீம் காங்கிரஸ் ஜனாதிபதி சந்திரிகாவிற்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் கடிதங்களை அனுப்பி வைத்திருக்கிறது. இந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடக்கு - கிழக்கு மாகாணசபைக்கு தேர்தல் நடத்தப்பட்டு பிரதிநிதிகள் தெரிவுசெய்யப்படாததால். இப்பகுதிக்கான அபிவிருத்திப் பணிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

தேர்தல்தொடர்ந்து ஒத்திவைத்து வருவது நீதியற்ற செயலாகும். சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந்தாலோசித்து மிகவிரைவில் வடக்கு - கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடத்த ஒழுங்குசெய்ய வேண்டும் என்று அக் கடிதத்தில் மேலும் கோரப்பட்டுள்ளது.

## சார்க் மாநாட்டுக்கு சந்திரிகா பயணம்!

(கொழும்பு)

இன்று ஆரம்பமாகவுள்ள பன்னிரண்டாவது சார்க் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி சந்திரிகா நேற்று மாலை இஸ்லாமாபாத் பயணமானார்.

இந்த மாநாட்டுக்கு முன்பு நடைபெறும் சார்க் அமைச்சர்கள் மட்டத்திலான 24 ஆவது கூட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் பாகிஸ்தான் தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்துகொள்ளும் இலங்கை பிரதிநிதிகளுக்கு வெளிநாட்டு அலு

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பொலிஸ் அதிகாரிகளின் மனநிலை யுத்த சூழலிலிருந்து மாறவில்லை!

## பொலிஸ் மா அதிபர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

பொலிஸ் நிலையங்களில் பணியாற்றும் சில அதிகாரிகள் இன்னமும் போர்க்கால மனநிலையுடனேயே உள்ளதாக பொலிஸ் மா அதிபர் இந்திரா டி சில்வா தெரிவித்தார்.

நாட்டின் 400 ஆவது பொலிஸ் நிலையம் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டபோது, பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இவ்வாறான மனநிலைகளைக் கொண்ட சில அதிகாரிகளினாலேயே தவறுகள் இடம்பெறுகின்றன. எனினும், இவ்வாறான நிலை எதிர்கா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நல்லுறவைப் பேண குழுக்கள் அமைப்பு!

(திருகோணமலை)

திருகோணமலையில் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே நல்லுறவை ஏற்படுத்தும் வகையில் தமிழீழ விடுதலைப் புலிகளும், முஸ்லிம் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் இணைந்த குழுக்கள் அமைக்கப்பட்டு செயற்படுத்தப்படவுள்ளன.

இது தொடர்பாக, புலிகளின் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் பதுமன், திருமலை அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக ஆகியோர் முஸ்லிம் பிரதிநிதிகளை

(12 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
டிக்கெட்டுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email :- jaffna @ expoavi. com, reservations @ expoavi.com.
(சி-2009)
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# கால்நடை அபிவிருத்திக்கு அரசாங்கம் நடவடிக்கை!

கால்நடை வளர்ப்போரின் நன்மை கருதி கால்நடை அபிவிருத்தி அமைச்சு நடவடிக்கை எடுக்கவுள்ளதால், கால்நடை வளர்ப்பாளர்களை தம்மோடு தொடர்புகொள்ளுமாறு யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றம் கேட்டுக்கொண்டுள்ளது.

யாழ்ப்பாணத்திலுள்ள கால்நடை வளர்ப்பவர்களின் நன்மைகருதி வர்த்தக தொழிற்துறை மன்றம், கால்நடை அபிவிருத்தி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கவுடன் தொடர்பு கொண்டது. இங்குள்ள கால்நடை வளர்ப்பாளர்கள் அரசினால் வழங்கப்படும் மானியங்கள், உதவிகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளமுடியாதுள்ளது. போர் நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில் - விவசாய மற்றும் கால்நடை உற்பத்திகள் மூலமே இவர்கள் தமது பொருளாதாரத்தை மேற்கொண்டுவந்தனர்.

தற்போதுள்ள சூழ்நிலையில் தகுந்த வசதிகளை இவர்களுக்கு செய்துகொடுப்பதன் மூலமாக - மேலும் பொருளாதாரத்தை மேம்படுத்த முடியுமென வர்த்தக தொழிற்துறை மன்றம், அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்கவுக்கு கடிதம் மூலம் அறிவித்திருந்தது.

இதனைக் கருத்திற்கொண்டு, அமைச்சர் தனது அமைச்சின் பொது ஆணையாளர் பேராசிரியர் எஸ். டபிள்யூ.சிறிலை குடாநாட்டுக்கு அனுப்பிவைக்கவுள்ளார். அவர் இங்கு வந்து கால்நடை வளர்ப்பவர்களுடன் கலந்துரையாடி, அவர்களது பிரச்சினைகளைக் கேட்டறியவுள்ளார்.

எனவே - ஆடு, மாடு, கோழி, தாரா போன்ற கால்நடைகளை சுய தொழில் வாய்ப்புக் கருதி வளர்த்து வருபவர்கள், தமது பெயர்களை உடனடியாக மெம்மணிவீதி, நல்லூரிலுள்ள வர்த்தக தொழிற்துறை மன்றத்தில் பதிவுசெய்யும்படியும் அல்லது 6609 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளும்படி வர்த்தக தொழிற்துறை மன்றப் பிரதம நிறைவேற்று அதிகாரி எஸ்.கீத பொன்கலன் தெரிவித்தார்.

பாரியளவில் கால்நடைகளை வைத்து தொழில் நடத்துபவர்களும், கூட்டுறவு முறையில் தொழில் நடத்துபவர்களும்கூட தம்மோடு தொடர்பு கொள்ள முடியுமெனவும், அவர்களுக்கு வேண்டிய வங்கிக் கடன் வசதிகள், ஆலோசனைகள், இதர உதவிகள் என்பவற்றைப் பெற்றுக் கொடுக்க தாம் தாயராகவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வர்த்தக தொழிற்துறை அமைச்சின் கீழ் இயங்கும் இந்த வர்த்தக தொழிற்துறை மன்றமானது - குடாநாட்டிலுள்ள கைத்தொழிலாளர்களின் பொருளாதார அபிவிருத்திக்காக பணியாற்றிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பனம்பொருள் கைப்பணி நிலையம் சங்கானையில் அமைக்கப்படும்!

பனை அபிவிருத்திச் சபையினால் பனம்பொருள் கைப்பணி நிலையம் சங்கானைப் பகுதியில் அமைக்கப்படவுள்ளது. இது தொடர்பாக தெரிய வருவதாவது, பனம் பொருட்களின் பாவனை வீதத்தை மேலும் அதிகரிக்கும் நோக்குடன் அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு பயிற்சியின் ஊடாக வேலைவாய்ப்பை வழங்கும் முகமாக - இந்தப் பனம்பொருள் கைப் பணிப்பயிற்சி நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

சங்கானை பிரதேச செயலாளரது அனுமதி பெற்றுள்ளதுடன், இங்குள்ள கிராம சேவையாளர்களின் பூரண ஒத்துழைப்புடன் இம்மாத நடுப்பகுதியில் திறக்கக்கூடியவகையில் இதற்கான பூர்வாங்க வேலைகள் நிறைவடைந்துள்ளதாகவும் பனை அபிவிருத்திச் சபையினர் தெரிவித்துள்ளனர்

இந்தப் பயிற்சி நிலையத்தின் ஊடாக பலர் பயிற்சியுடன் கூடிய தொழில்வாய்ப்பைப் பெறுவதுடன், பனம்பொருட்களின் உற்பத்தி வகைளை அதிகரிப்பதுடன், கைப்பணிப் பொருட்களின் பாவனையும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (91)

## தையல் பயிற்சிக் கண்காட்சி

வல்வை ஆதிசக்தி சனசமூக நிலையத்தால் நடத்தப்படும், தையல பயிற்சிக் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் வைபவமும், வல்வை ஆதிசக்தி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தால் நடத்தப்படவுள்ளது. இந்த நிகழ்வு 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆதிசக்தி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தில் ந.நந்தகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் - பிரதம விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலாளர் அ.சிவசாமி கலந்துகொள்ளவுள்ளார்.

## முதியோர் இல்லம் திறந்துவைப்பு

எதிர்வரும் 7 ஆம் திகதியன்று கோப்பாயில் முதியோர் இல்லமொன்று திறந்துவைக்கப்படவுள்ளது. இந்த முதியோர் இல்லமானது தனிப்பட்ட சில மக்களின் முயற்சியினாலேயே ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

இந்த முதியோர் இல்லத்திற்கு வேண்டிய வீட்டையும், காணியையும் வெளிநாட்டில் வசிக்கும் கோப்பாயைச் சேர்ந்த பெண்ணொருவர் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். இந்த நிலையத்தை யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ப.திலகநாயகம் போல் திறந்துவைப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)



யாழ்.பண்ணை முனீஸ்வரன் வீதியிலுள்ள குளத்துக்கு அருகாமையில் குப்பைகள் அனைத்தும் கொட்டப்பட்டு எரியூட்டிவிட்டு, உடனே மாநகரசபை ஊழியர்கள் சென்றுவிடுகிறார்கள். அதன்பின் அங்கு கொட்டப்பட்ட குப்பைகள்- காற்றினால் அவ்வீதியோரமெங்கும் பரவிக் காணப்படுகிறது. இந்த நடைமுறை நாளாந்தம் நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. (113)

## யாழ். பிரதம தபாலகம் 14 ஆம் திகதி திறப்பு!

புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள யாழ்.பிரதம தபாலகம் எதிர்வரும் 14 ஆம் திகதி திறந்துவைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கட்டடத் தொகுதியை தபால் துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் திறந்துவைக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த வருட ஆரம்பத்தில் ஆரமபிக்கப்பட்ட தபாலக கட்டடப் பணிகளில் பெரும்பாலானவை தற்போது நிறைவுபெற்றுள்ளன. இந்தக் கட்டடத்திலேயே, வடமாகாண அஞ்சல்மா அதிபரின் அலுவலகம் மற்றும் யாழ்.பிரதம தபாலகம் என்பன இயங்கவுள்ளன. முன்னரும் பல தடவைகள் புதிய தபாலகத்தை திறந்து வைப்பது தொடர்பாக தீர்மானிக்கப்பட்டபோதும், அவ் ஏற்பாடுகள் ரத்துச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)


## விற்பனைக்கு

உங்கள் வீட்டுக்குத் தேவையான அனைத்து மின்சார உபகரணங்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
TELESONIC, RIKON, PACIFIC, USHA AND SUNDA வகையில் Fans, Toasters, Irons, Gas Cookers, Washing Machines, Food Jars, Blenders, Clocks, Rice Cookers, Televisions, Ceiling Fans, Mega Vacuum flasks இன்னும் பலதரப்பட்ட உபகரணங்களும் உண்டு.
IZZY ENTERPRISES
164/1, Prince Street, Colombo - 11
T.P:- 2437843 Fax:- 075-354304
(சி-2023)

## சிறு விளம்பரம்

### தபால் மூலம் சிங்களம்

இப்போது நீங்கள் சிங்கள மொழியை வீட்டில் இருந்தவாறு பேச/எழுத/வாசிக்க/படிக்கலாம். விபரங்களுக்கு எழுதவும் :-வழிகாட்டல் ஆசிரியர் திரு.மல்வான, இல.56, அம்மன் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (சி-2006)

### தவறிவிட்டது

நல்லூர் சட்டநாதர் கோவில் அருகில் உள்ள லிங்கோ நுண்பட்டறை உரிமையாளர் இராசலிங்கம் ஆகிய எனது 71 சிறி 2115 இலக்க லான்ட் மாஸ்டரின் காப்புறுதிப் பத்திரம் வாகனவரி பத்திரம் என்பன சட்டநாதர் கோவில் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி நிறுவனத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (சி-2028)

திறைஞ்சனல் சங்கானை
இன்றுமட்டும் மாதவன், ஜோதிகா நடித்த
பிரியமான தோழி
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
KEOMA
(சி-2004)

ராஜா யாழ்ப்பாணம்.
8 ஆம் திகதிவரை
விஜய், ஜோதிகா, ரகுவரன், கௌசல்யா நடித்த
திருமலை
காட்சிநேரம் :
10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-2005)

## பணி நிலை வேண்டுகை

யாழ்.மாவட்டத்திற்குட்பட்ட சந்தைகளுக்கான வரி அறவீட்டாளர் பணிநிலைக்கு ஆண்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. எனவே, சந்தைகளிற் பணிபுரிய விரும்புவோர் தன் வரலாறு அடங்கிய விளக்கங்களுடன் 2004.01.12 ஆம் நாள் நடைபெறவுள்ள நேர்முகத்தேர்விற்கு வருகை தருமாறு வேண்டுகிறோம்.

**தகைமைகள்**

01. தமிழ், கணிதம் உட்பட க.பொ.த.சாதாரணதரத்தில் தேறியிருத்தல் வேண்டும்.
02. அகவை : 18 - 40 வரை இருத்தல் வேண்டும்.

**நேர்முகத் தேர்வு நடைபெறும்**
நாள்: 2004.01.12
நேரம்: காலை 10.00 மணி
இடம்: 27, ஆடியபாதம் வீதி, கொக்குவில்.

குறிப்பு: 01. நேர்முகத்தேர்விற்கு ஆவணங்களுடன் வருகை தருதல் வேண்டும்.

ஆளுநகை,
சந்தைப்பகுதி, யாழ்.மாவட்டம். (574)

## O/L... இன் பின் அடுத்தது என்ன?

விடுமுறையை வீணாக கழிக்காதீர்
சரளமான ஆங்கில அறிவுடன் Diploma சான்றிதழ் ஒன்றும்
இலவச தபால் மூலம் ஆங்கில பாடநெறியை தொடருங்கள்

### இலவசம் பின்வருவன இலவசம்



அழகிய ட.சேர்ட் ஒன்றுடன்
2004ம் ஆண்டுக்கான (Diary) தினக்குறிப்பேடு
ஒன்று அடையாள அட்டை (Identity Card)

Diary





(569)

பாடநெறியில் இணையும் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 4/50 பெறுமதியான 3 முத்திரை அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

The ENGLISH LANGUAGE INSTITUTE P.O.BOX 083 Kandy Tel: 0777-802849




## மறைந்தும் மறையாத

### மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் நான்காம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம்

*தரணியெங்கும் தவிக்கும் தமிழர் தம் உரிமைக்குரலைக் கர்ச்சித்த மறத்தமிழனை நன்றி மறவாமல் நினைவு கூருவோமாக.*

இடம் :- கைலாசபதி கலை அரங்கம் - யாழ்.பல்கலைக்கழகம்
காலம் :- 05.01.2004 திங்கட்கிழமை
நேரம் :- மாலை 3.30 மணி

**நிகழ்ச்சிநிரல்**

மலர் அஞ்சலி :-
அகவணக்கம் :-
தலைமையுரை :- திரு.சீ.வி.கே.சிவஞானம் (உபதலைவர், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்)
நினைவுரைகள் :- அருட்திரு.ம.சேவியர் கருணாரத்தினம் (பங்குத் தந்தை, நாவாந்துறை)
பேராசிரியர் சு.மோகனதாஸ் (துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம்)
பேராசிரியர் எஸ்.சண்முகதாஸ் (தலைவர், தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)
தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர் கௌரவ அ.விநாயகமூர்த்தி (பா.உ) (தலைவர் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்)
திரு.ப.பகீர்தரன் (தலைவர், யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம்)
திரு.த.மகாசிவம் (பொதுச்செயலாளர், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்)
திரு.எஸ்.கஜேந்திரன் (தலைவர், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை)
நன்றியுரை :- திரு.ஆர்.ஈ.ஆனந்தராசா (உபதலைவர், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ்)

*தமிழ் பேசும் இனத்திற்காக இறுதி மூச்சுவரை போராடி, இறுதியில் தன்னுயிரை தியாகம் செய்த தீந்தமிழனுக்கு எமது நன்றிக்கடனைச் செலுத்த அனைவரும் திரண்டுவந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

மாமனிதர் குமார் பொன்னம்பலம்,
ஞாபகார்த்தக்குழு.

(சி-2024)

# மத்திய மாகாண முதலமைச்சர் பதவிக்கு ஐ.தே.க. சார்பில் ஐவர் தேர்தல் களத்தில்

மத்திய மாகாணசபைக்கு நடைபெறவுள்ள தேர்தலில், தலைமை வேட்பாளராக - முதலமைச்சர் பதவிக்கு ஐக்கியதேசியக் கட்சியைச் சேர்ந்த ஐவர் விண்ணப்பித்திருப்பதாக, கட்சியின் தலைமையகமான சிறிகோத்தா வட்டாரங்கள் தெரிவித்தன.

மத்திய மாகாண சபையின் தற்போதைய முதலமைச்சரான வசந்த அலுவிகார இது குறித்துக் கருத்து வெளியிடுகையில் -

கட்சித் தலைமை, இறுதித் தேர்தலில் யாரைத் தலைமை வேட்பாளராக முன்நிறுத்துவது என்பது குறித்து முடிவுசெய்யும். ஆனால், இந்தத் தெரிவில் மாவட்ட அடிப்படையில் கூடுதல் வாக்குகளைப் பெறக்கூடிய வேட்பாளர் ஒருவருக்கே முன்னுரிமை வழங்கப்படும் எனத் தெரிவித்தார்.

மாகாண முதலமைச்சர் பதவியைப் பிடிக்கும் நோக்குடன் தற்போதைய முதலமைச்சர் வசந்த அலுவிகார, மத்தியமாகாண சுகாதார அமைச்சர் காலிய பண்டார திஸநாயக்க, விவசாய அமைச்சர் காமினி ராஜபக்ஷ, சரத் கொன்ஹகே, முன்னாள் முதலமைச்சர் நத்திமித்திர எக்கநாயக்க ஆகியோர் களத்தில் உள்ளனர்.

இதேவேளை - மத்திய மாகாண சபையில் கடந்த நான்கு மாதங்களில் மட்டும் பெருமளவு அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தியிருப்பதாக முதலமைச்சர் வசந்த அலுவிகார தெரிவித்தார்.

மாத்தளை, கண்டி, நுவரெலியா மாவட்டங்களில் மட்டும் இந்தக் காலப்பகுதியில் 600 மில்லியன் ரூபா செலவிடப்பட்டதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# ஒதுக்கப்பட்ட விடுதிகளை அபகரிக்கும் உயரதிகாரிகள்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் பணியாற்றும் அரச உயர் அதிகாரிகள் சிலர், தமக்கு ஒதுக்கப்பட்ட விடுதிகளை அபகரிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர்

அரசுக்குச் சொந்தமான தங்கு விடுதிகளில் தங்கியிருந்து பணிபுரியும் அரச உயர்அதிகாரிகள், தாம மாற்றம் பெற்று வேறு இடங்களுக்குச செல்லும்போது, தாம் தங்கியிருந்த விடுதிகளை மீளவும் ஒப்படைக்க மறுப்புத் தெரிவித்து வருகின்றனர்.

குறிப்பாக- சாலை அபிவிருத்தித் திணைக்களம், நகரசபை, அரச செயலகம் ஆகியவற்றில் பணியாற்றும் குறிப்பிட்ட சிலரே அவ்வாறான செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால், புதிதாக மாற்றம் பெற்றுவரும் அரச உயரதிகாரிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க நேரிடுகின்றது.

# ஆறாம் திகதிக்குப் பின்னர் வைகோ பிணை மனுத்தாக்கல்

(சென்னை)

வேலூர் மத்திய சிறையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் ம.தி.மு.கவின் பொதுச் செயலாளர் வை.கோ. - எதிர்வரும் ஆறாம் திகதிக்குப் பின்னர், பிணைகோரி நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யவிருக்கிறார்.

பல்வேறு கட்சிகளின் தலைவர்களும் விடுத்த கோரிக்கைகளை அடுத்தே, பிணையில் வெளிவர வை.கோ தீர்மானித்துள்ளார். வேலூர் சிறையில் உள்ள வை.கோவை, அண்மையில் பதவி விலகிய மத்தியசபை அமைச்சர்கள் கண்ணப்பன், செஞ்சிராமச்சந்திரன் ஆகியோர் சந்தித்துப் பேசியுள்ளனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர், கண்ணப்பன் செய்தியாளர்களிடம் பேசியபோதே, பொடாச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் எட்டு ம.தி.மு.க நிர்வாகிகளின் பிணைமனு மீதான விசாரணை, எதிர்வரும் ஆறாம் திகதி நீதிமன்றத்தில் இடம்பெறவுள்ளது என்றும்,

இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்ட பின்னர் வை.கோ தனது பிணை மனுவைத் தாக்கல் செய்வார் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

# முஸ்லிம் காங்கிரஸின் திட்டவரைபை அரசியல் குழு இன்று ஆராயும்!

விடுதலைப் புலிகளின் சமஷ்டி முறை இடைக்கால நிர்வாகம் தொடர்பான திட்ட யோசனைக்கு, முஸ்லிம் காங்கிரஸ் - மக்களின் சார்பாக தயாரித்துள்ள திட்டயோசனை, இன்று அரசியல் குழுவின் அங்கீகாரம் பெறப்படவுள்ளது.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் குழு இன்று கூடி இந்த யோசனை குறித்து ஆராயவுள்ளது.

இந்தக் கூட்டம் முஸ்லிம் காங்கிரஸின் தலைவரான ரவூப் ஹக்கீம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (01)

# ஜனாதிபதி அமைச்சுக்களைப் பொறுப்பேற்றதால் பெருமளவிலான நிதி முடங்கியுள்ளது

## அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவிப்பு

ஜனாதிபதி, மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்ற காரணத்தால், நாட்டுக்கு வரவேண்டிய பெருமளவிலான நிதி முடக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

இலங்கைக்கு வரவிருந்த 4500 மில்லியன் டொலர் நிதி இந்த வகையில் முடங்கிப்போயுள்ளது. இதற்கு ஜனாதிபதி பொறுப்பேற்க வேண்டியுள்ளது.

இந்த வகையில், அமெரிக்கா மாத்திரம் 10 ஆயிரம் கோடி ரூபாவை இலங்கைக்கு, 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வழங்கவுள்ளது.

இந்த நிதியுதவிகள், ஜனாதிபதியின் செயலால் தற்போது கிடைக்காமல் போயுள்ளதாக அவர் மேலும் தெர்வித்தார்.

இலங்கையின் அபிவிருத்திப் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், இந்த நிலையினை அமெரிக்கா சுட்டிக்காட்டி - ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையிலான முரண்பாட்டை நீக்கி, சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்க வேண்டுமெனவும் கோரியிருந்ததாக கருணாசேன கொடித்துவக்கு மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, அமெரிக்காவின் தலையீடுகளை இலங்கைக்கு கொண்டு வருவதன்மூலம், இலங்கை அரசு ஏனைய அரசியல் கட்சியின் அச்சுறுத்தும் பாணியில் செயற்பட்டு வருகின்றது என ஜே.வி.பி குற்றம் சுமத்தியுள்ளது.

### வேலைவாய்ப்புக் கோட்டா உரியமுறையில் பயன்படுத்தாமையால்

# சட்டவிரோதமான முறையில் இத்தாலி செல்வோரின் தொகை அதிகரித்தது

## தொழில் அமைச்சர் சமரசிங்க கூறுகிறார்

(கொழும்பு)

கடந்த ஆண்டு இத்தாலியில் 1500 பேருக்கான வேலை வாய்ப்புக் கோட்டா கிடைத்ததாகவும், அதனை அரசு உரிய முறையில் பயன்படுத்தாத காரணத்தாலேயே சட்டவிரோதமான முறையில் இத்தாலிக்குச் செல்வோரின் தொகை அதிகரித்துள்ளதாக தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

சென்ற ஆண்டு மட்டும் இவ்வாறு சட்டவிரோதமான முறையில் இத்தாலிக்குச் சென்றோர் தொகை 1350 என்றும் இவற்றில் 750 பேர் வெளிநாட்டவர்கள் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - 2004 ஆம் ஆண்டுக்கான வேலைவாய்ப்புக் கோட்டா இன்னமும் அறிவிக்கப்படவில்லை எனவும், கடந்த ஆண்டு இத்தாலிய அரசினால் வழங்கப்பட்டு பயன்படுத்தப்பட முடியாமல்போன கோட்டாவையும் சேர்த்து இந்த ஆண்டு வழங்கினால், சுமார் 3 ஆயிரம் பேருக்கு இத்தாலி நாட்டில் வேலைவாய்ப்புக் கிடைக்க வாய்ப்புக்கள் இருக்கும் எனவும் தொழில் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### புதிய திருத்தச் சட்டத்தின்படி

# சேவையிலிருந்து விலகும் ஊழியர்களுக்கு சேவையாற்றக்கூடிய காலத்திற்கு நஷ்டஈடு

## தொழில் அமைச்சர் தெரிவிப்பு

ஊழியர் ஒருவரின் சேவையை முடிவுக்குக் கொண்டுவரும் வகையில், அமுலுக்கு வந்துள்ள புதிய திருத்தச் சட்டமூலத்தின் பிரகாரம், வேலையில் இருந்து விலகும் ஊழியர்களுக்கு அவருடைய சேவைக் காலத்துக்கு மட்டுமல்லாது தொடர்ந்து சேவையாற்றக்கூடிய காலத்துக்கும் நஷ்டஈடு கிடைக்குமென தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

உலகின் வேறு எந்த நாட்டிலும் வேலையை விட்டு விலகும் ஒருவருக்கு, தொடர்ந்து வேலை செய்யக்கூடிய காலத்துக்கான நட்டஈடு வழங்கப்படுவதில்லை என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

1971 ஆம் 45 ஆம் இலக்க சேவையை முடிவுக்கு கொண்டுவரும சட்டமூலத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள திருத்தங்களின் காரணமாவது, நட்டஈடு வழங்கும்போது இருதரப்பினருக்குமிடையில் இலகுவாக கடமையாற்றுவதற்குரிய வழிமுறைகள் உருவாக்கப்பட்டிருப்பதாக அமைச்சர் மேலும் கூறினார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

2003 ஆம் ஆண்டில் 12 இலக்க சேவையை முடிவுக்குக் கொண்டு வரும் சட்டமூலம் நேற்றுமுன்தினம் முதல் அமுல்படுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தொழிலை முடிவுறுத்தும் சட்டம் இந்த ஆண்டுமுதல் அமுலுக்கு!

நாடாளுமன்றத்தில் கடந்த ஆண்டு கொண்டுவரப்பட்ட தொழிலை முடிவுறுத்தும் சட்டம், இந்த வருடம் முதல் அமுல்படுத்படுத்தப்படவுள்ளதாக தொழில் அமைச்சு அறிவித்துள்ளது.

இந்தச் சட்டத்தின்மூலம் தனியார் துறையினருக்கு அதிக நன்மைகள் கிடைக்கவுள்ளன. தனியார் துறை வேலையிலிருந்து விலகும் ஒருவர் உரிய ஈட்டைப் பெற்றுக்கொள்ள இதில் வகைசெய்யப்பட்டுள்ளது.

தனியார் சேவையிலிருந்து விலகியவர் பிறிதொரு தொழிலை மேற்கொள்ளும் வரை - 12 மாதத்திலிருந்து 15 மாதங்கள் வரை உரிய கொடுப்பனவுகள் வழங்கப்படும். அத்துடன் சேவையிலிருந்து விலக்கிக்கொள்ளப்பட்ட ஒருவர், தொழில் அமைச்சில் பதிந்து அதன் மூலமாகப் புதியதொரு தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள முடியும். இதற்கான ஏற்பாடுகளும் மேற்படி சட்டத்தில் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை, தனியார் துறையின் சம்பள நிர்ணய சபை மூலம் 15 வீத சம்பள உயர்வை மேற்கொள்ள இதில் வகைசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# 67 ஐ.ரி.என் ஊழியர்கள் திடீரெனப் பதவி நீக்கம்

(கொழும்பு)

புதுவருட தினத்திலிருந்து, 67 ஊழியர்களை சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் (ஐ.ரி.என்) வேலையில் இருந்து நீக்கியுள்ளது.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது - ஐ.ரி.என் தொலைக்காட்சி சேவையின் புதிய நிர்வாகமே, 67 ஊழியர்களை முன்னறிவிப்பு எதுவுமின்றி புதுவருட தினத்தன்று வேலை நீக்கம் செய்தது.

புதுவருட தினத்தன்று வேலைக்குச்சென்ற ஊழியர்களுக்கு அதிர்ச்சி காத்திருந்தது. ஊடகத்துறை அமைச்சை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொறுப்பேற்ற பின்னர், ஐ.ரி.என். தொலைக்காட்சி நிறுவனத்தில் புதிய தலைவராக நியூட்டன் குணவர்த்தன நியமிக்கப்பட்டார்.

நியூட்டன் குணவர்த்தனவே இந்த அதிரடி நடவடிக்கையை எடுத்திருந்தார். வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களில் ஊடகவியலாளர்களும் அடங்குவர்.

செய்தித் தயாரிப்பாளர்கள், செய்தி ஆசிரியர்கள், உதவித் தயாரிப்பாளர்கள், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள், அறிவிப்பாளர்கள் ஆகியோரும் வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

இவர்களைவிட நிர்வாகப் பகுதியைச் சேர்ந்த தட்டெழுத்தாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், கமரா உதவியாளர்கள், எழுதுவினைஞர்கள், தொழிநுட்பக்கலைஞர்கள், தொழிலாளர்கள் மற்றும் அலுவலக உதவியாளர்கள் ஆகியோரும் திடீர் பதவிநீக்கம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

திடீர் வேலைநீக்க உத்தரவுக்கு அரசியல் பழிவாங்கலே காரணம் என்று பாதிக்கப்பட்ட ஊழியர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

### பொறியியல் பீட அனுமதியில் பாதிக்கப்பட்ட மாணவர்கள்

# பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு முடிவு

கடந்த வருடம் நடைபெற்று முடிந்த க.பொ.த (உ/த) பரீட்சைப் பெறுபேறுகளின்படி, பொறியியல்பீட அனுமதியில் பாதிக்கப்பட்ட குடாநாட்டு மாணவர்கள், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவிற்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட மாணவர்கள் தெரிவிக்கும்போது, யாழ்ப்பாண மாவட்டத்திற்கான பொறியியல் பீட அனுமதியில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தவறான முடிவுகளை எடுத்துள்ளது. வழமையாக வழங்கப்படும் மாவட்ட கோட்டா எண்ணிக்கை இந்த வருடம் எவ்வித முன்னறிவித்தல்களும் இன்றி குறைக்கப்பட்டுள்ளது. இதனால், பல மாணவர்கள் பாதிப்படைய நேரிட்டுள்ளது.

எனவே இந்த விடயம் தொடர்பாக சட்ட நிபுணர்களின் ஆலோசனைகளுடன் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம். இது தொடர்பாக உயர்கல்விச் சமூகம் விளக்கமளிக்க முன்வரவேண்டும். இது அவர்களது தார்மீகக் கடமை. இந்த விடயத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் எம்மோடு இணைந்து நிற்பதைப் பாராட்டுவதோடு, எமக்கு சரியான தீர்வு கிடைக்கும்வரை அவர்களது உதவியைப் பெறுவது என தீர்மானித்துள்ளோம்.

பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் நடவடிக்கை தொடர்பாக பாடசாலை அதிபர்களும், இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆகியன உரிய நடவடிக்கை எடுத்துத் தரவேண்டும் என அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச)

# 4 விக்கெட்டுக்களால் பாகிஸ்தானை வீழ்த்தியது நியூஸிலாந்து அணி

(வெலிங்டன்)




நியூஸிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதலாவது ஒருநாள் போட்டியில் நான்கு விக்கெட் வித்தியாசத்தில் நியூஸிலாந்து அணி வெற்றிபெற்றது.

நியூஸிலாந்துக்கு இறுதிப் பயணத்தை மேற்கொண்டிருக்கும் பாகிஸ்தான் அணி ஐந்து ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது. இந்தத் தொடரின் முதல்நாள் ஆட்டம் நேற்று ஒக்லண்ட் நகரில் இடம்பெற்றது.

நியூஸிலாந்து அணி நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் பாகிஸ்தான் அணியை துடுப்பெடுத்தாட அழைப்பு விடுத்தது.

பாகிஸ்தான் அணி வீரர்கள் மோசமாக விளையாடியதால் மொயின்கானைத் தவிர, ஏனைய வீரர்களால் குறிப்பிட்டளவு ஓட்டங்களைப் பெறமுடியவில்லை. மொயின் கான் 72 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பாகிஸ்தான் அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 229 ஓட்டங்களைப் பெற்றது.

இதையடுத்து, துடுப்பெடுத்தாட வந்த நியூஸிலாந்து அணிவீரர் பிளெமிங் 45 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். ஏனைய வீரர்கள் சிறப்பாக விளையாடாதபோதும், ஸ்ரைரிஸ் 108 பந்துகளில் 101 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றதன் மூலம் அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச்சென்றார். 'இவர் 10 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடித்தார்.

நியூஸிலாந்து அணி 49.1 ஓவர்களிலே 6 விக்கெட் இழப்பிற்கு 230 ஓட்டங்களைப் பெற்று 4 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

நியூஸிலாந்து அணிவீரர் ஸ்ரைரிஸ் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தி; 101 ஓட்டங்களைப் பெற்று ஆட்டநாயகனாகத் தெரிவுசெய்யப் பட்டார்.

# அவுஸ்ரேலிய மண்ணில் இந்திய அணி சாதனை

(சிட்னி)

அவுஸ்ரேலிய அணிக்கு எதிராக சிட்னியில் நடைபெறும் இறுதி டெஸ்ட் போட்டியின் இரண்டாவது நாள் ஆட்டத்தில் இந்திய அணி வீரர்கள் சச்சின் டெண்டுல்கரும், லக்ஷ்மனும் ஓட்டங்களைக் குவித்து தமது அணியை மிகவும் வலுவான நிலைக்கு இட்டுச்சென்றனர்.

3 விக்கெட் இழப்பிற்கு 284 ஓட்டங்கள் என்ற நிலையில் நேற்று ஆட்டத்தை ஆரம்பித்த இந்தியா, சச்சின் டெண்டுல்கர் மற்றும் லக்ஷ்மன் ஜோடியின் அபார ஆட்டத்தால் ஓட்டங்களைக் குவித்துக்கொண்டது.

74 ஓட்டங்களுடன் களத்தில் இருந்த சச்சின் டெண்டுல்கர் குறுகிய நேரத்திலேயே சதமடித்தார். 29 ஓட்டங்களுடன் துடுப்பாட்டத்தை ஆரம்பித்த லக்ஷ்மனும் அதிரடியாக ஓட்டங்களைக் குவித்து குறுகிய நேரத்திலேயே 100 ஓட்டங்களைக் கடந்தார்.

பிரட்லீ, கிலெஸ்பி ஆகியோரின் பந்துகளை இரு வீரர்களும் சிறப்பாகத் தடுத்தாடி அவுஸ்ரேலிய அணியை திணறடித்தனர்.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான சோப்ரா 45, ஷேவாக் 72, ராவிட் 38 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தபோதும், நான்காவது விக்கெட் இணைப்பாட்டமாக ஜோடி சேர்ந்த சச்சின் டெண்டுல்கர், லக்ஷ்மன் இருவரும் மிகச் சிறப்பாக விளையாடி ஓட்டங்களைக் குவித்தனர்.

இதில் லக்ஷ்மன் 30 பவுண்டறிகள் உட்பட 178 ஓட்டங்களைப்பெற்ற நிலையில் கிலெஸ்பியின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

அத்துடன், அவுஸ்ரேலிய அணிக்கெதிரான நான்காவது விக்கெட் இணைப்பில் இருவரும் புதிய சாதனையாக 250 ஓட்டங்களுக்கு மேல் எடுத்தனர்.

இதற்கு முன்னர் 1978 ஆம் ஆண்டு பெங்களூரில் நடந்த ஆட்டத்தில் வெங்சர்க்கார் - விஸ்வநாத் இருவரும் 159 ஓட்டங்கள் எடுத்ததே இதுவரை நான்காவது விக்கெட் ஜோடி இணைப்பாட்ட சாதனையாகும்.




அடுத்து ஆடவந்த அணித் தலைவர் கங்குலி 16 ஓட்டங்களுடன் பிரட்லீயின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். அதன் பின் விக்கெட் காப்பாளர் பார்த்தீவ் பட்டேல் மிகச்சிறப்பாக 40 பந்துகளை எதிர்கொண்டு 45 ஓட்டங்களை எடுத்தார். நேற்றைய ஆட்டநேரமுடிவில் இந்திய அணி 5 விக்கெட்டுக்களை இழந்து 650 ஓட்டங்களை எடுத்து மிகவும் வலுவான நிலையில் உள்ளது. இதில் சச்சின் 220, பார்த்தீவ் பட்டேல் 45 ஓட்டங்களுடன் ஆட்ட மிழக்காமல் உள்ளனர்.

அவுஸ்ரேலிய அணியின் பந்துவீச்சாளர்கள் சார்பில் கிலெஸ்பி 3, பிரட்லீ 2 விக்கெட்டுக்களை எடுத்துள்ளனர்.

இதேவேளை, அவுஸ்ரேலிய மண்ணில் வெளிநாட்டு அணியொன்று பெற்ற ஆகக் கூடுதலான ஓட்ட எண்ணிக்



கையும் இதுவாகும்.

இத்துடன் கடந்த பதின்நான்கு மாதங்களின் பின்னர் தனது 32 ஆவது சதத்தைப் பெற்றுள்ள டெண்டுல்கர் ஸ்ரீவ் வோ எடுத்த 32 சதங்கள் என்ற நிலையுடன் சமப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு

## மேற்கிந்தியஅணியுடனான

# மூன்றாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா 532 ஓட்டங்கள்



மேற்கிந்திய‌த் தீவுகள் அணிக்கெதிராக கேப்டவுனில் நடைபெறும் மூன்றாவது டெஸ்ட்போட்டியில் தென்னாபிரிக்க அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 532 ஓட்டங்களை எடுத்துள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது அதன்படி ஆடத் தொடங்கிய தென்னாபிரிக்க அணி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான அணித் தலைவர் ஸ்மித், கிப்ஸ் இருவரும் முறையே 42,33 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டமிழந்தனர். அடுத்து ஆடிய றுடோல்ப் 101 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார். ஜேக்கப் கலிஸ் ஆடிக்கொண்டிருந்தவேளை, எட்வேட்ஸ் வீசிய பந்து கலிஸின் காலில் பட்டதனால் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் 26 ஓட்டங்களுடன் ஆட்டத்தை இடைநிறுத்தி வெளியேறினார். அதன்பின் வந்த நீல் மக்கன்சி 76 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அதன்பின்னர் மார்க்பௌச்சர், பொலக் இருவரும் இணைந்து ஆடியபோதும் பொலக் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். காயம் காரணமாக ஆட்டத்தை இடைநிறுத்திச் சென்ற கலிஸ் மீளவும் பௌச்சருடன் சேர்ந்து இணைப்பாட்டமாக 146 ஓட்டங்களைப் பெற்றனர். கலிஸ் 76 ஓட்டங்களையும், பௌச்சர் ஆட்டமிழக்காமல் 122 ஓட்டங்களையும் பெற்றனர். இதில் 21 பவுண்டரிகளும் அடங்கும். முடிவில் தென்னாபிரிக்க அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 532 ஓட்டங்களைப் பெற்றது.

மேற்கிந்திய தீவுகள் அணியின் பந்து வீச்சாளர்களில் அடம் சான் போட் 4 விக்கெட்டுக்களையும், டிரேக்ஸ், எட்வேட்ஸ், மொகமட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.



அதன்பின்னர் ஆடத்தொடங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி விக்கெட் இழப்பின்றி 74 ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

மேற்கிந்திய‌த் தீவுகளுடன் நடந்த இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் தென்னாபிரிக்க அணி வென்று 2:0 என்று முன்னிலையில் உள்ளது.

# பா.ஜ. கட்சியுடனான கூட்டணி; ஜெயலலிதா நிபந்தனை விதிப்பு!

வட மாநிலங்களில் பாரதீய ஜனதா வெற்றி பெற்றதைத் தொடர்ந்து நாடாளுமன்ற தேர்தலை முன்கூட்டியே நடத்த பாரதீய ஜனதா கட்சியின் மேலிடம் முடிவுசெய்துள்ளது. வருகின்ற ஏப்ரல் அல்லது மே மாதம் தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தேர்தல் முன்கூட்டியே நடக்க இருப்பதால் அரசியல் கட்சிகள் கூட்டணி அமைப்பதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றன.

தேசிய ஜனநாயக கூட்டணியிலிருந்து தி.மு.க. வெளியேறியதும் பாரதிய ஜனதா கட்சியின் மேலிடம் தமிழ் நாட்டில் அதி.மு.க.வுடன் கூட்டணி வைக்க தீவிரமாக முயன்று வருகின்றது. ஆனால், ஜெயலலிதா கூட்டணியில் ஆர்வம் காட்டாதது போல இருந்து வருகின்றார்.

அ.தி.மு.க. தலைமையில் கூட்டணி அமைப்போம் என்று தமிழ்நாடு பாரதீய ஜனதா கட்சி தலைவர்கள் அறிவித்துள்ளனர். இது குறித்து ஜெயலலிதா எதுவும் கூறவில்லை.

கூட்டணி வைப்பதற்கு முன் தனக்கு வேண்டிய சில காரியங்கள் உடனே செய்யுமாறு ஜெயலலிதா பாரதய ஜனதா மேலிடத்தை நிர்ப்பந்தித்து வருவதாக கூறப்படுகிறது.

சமீபத்தில் ஜெயலலிதாவிடம் துணைப் பிரதமர் அத்வானி பேசியபோது ஜெயலலிதா திடீர் நிபந்தனைகள் விதித்தாராம். அதனால், பாரதய ஜனதா மேலிடம் கடும் அதிர்ச்சி அடைந்துள்ளது.

மத்திய நிதித்துறையில் தன் மீது நிலுவையில் உள்ள வழக்குகளை உடனடியாக வாபஸ் வாங்க வேண்டும், பொடா சட்டத்தை வலுவிழக்கச் செய்ய கூடாது, வைகோ பிணையில் வெளியே வருவதை தடுக்க வேண்டும், கர்நாடகத்தில் தன் மீதான வழக்கை விசாரிக்காமல் வேறு மாநிலத்துக்கு மாற்ற துணைபுரிய வேண்டும் அல்லது நாடாளுமன்ற தேர்தல் முடியும் வரை கிடப்பில் போடவேண்டும் என்று ஜெயலலிதா திடீர் நிபந்தனைகளை விதித்தாராம்.

தனது தனிப்பட்ட நிபந்தனைகளை மறைப்பதற்காக காவிரி பிரச்சனை தொடர்பான நிபந்தனையும் ஜெயலலிதா வைத்துள்ளார்.

காவிரி பிரச்சனையில் மத்திய அரசு துரோகம் செய்வதாக நான் ஏற்கனவே கூறிவிட்டேன். எனவே, காவிரியில் தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விட்டால்தான், அதைக்கூறி என்னால் தேர்தலின்போது உங்களுக்காக வாக்குகேட்க முடியும். எனவே, இந்த நிபந்தனைகளை ஏற்றால் தான் கூட்டணி வைத்துக்கொள்ள முடியும் என்று திட்டவட்டமாக கூறிவிட்டாரெனக் கூறப்படுகிறது.

இதனால் ஜெயலலிதாவை எப்படியாவது சமாதானப்படுத்த வேண்டும் என்பதே பாரதிய ஜனதாவின் உடனடித் திட்டமாகும். கூட்டணி இல்லாவிட்டால் ஒரு இடம்கூட கிடைக்காது என்பதால் ஜெயலலிதாவை சமாதானப்படுத்துவதுதான் ஒரேவழி என்று பாரதிய ஜனதாவின் மேலிடம் கருதுகிறது. இந்த சமாதான முயற்சியிலிருந்து பிரதமர் வாஜ்பாய் ஒதுங்கிக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது. இதனால், இந்த முயற்சியில் அத்வானி முழுவதுமாக ஈடுபட்டுள்ளார். ஜெயலலிதாவின் நிபந்தனைகளின் தன்மை பற்றியும், எந்தளவு அவற்றை நிறைவேற்ற இயலும் என்பதை நேரில் விளக்கவும் தூதரை அனுப்ப அத்வானி முடிவுசெய்தார்.

இதற்காக மத்திய அமைச்சர் ஜஸ்வந்த் சிங்கை சென்னை சென்று ஜெயலலிதாவை சந்திக்குமாறு அத்வானி கூறியபோது அவர் மறுத்து விட்டார். ஜெயலலிதாவை தன்னால் சமாதானப்படுத்த இயலாது என்று அவர் கூறிவிட்டார். ஜஸ்வந்த்சிங் ஏற்கனவே பல முறை சென்னை வந்து ஜெயலலிதாவை சமாதானப்படுத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது. இதன் காரணமாக ஜெயலலிதா விதித்த நிபந்தனைகளில் உள்ள சட்ட நுணுக்கத்தை எடுத்துக்கூறவும், எந்தளவு மத்திய அரசால் உதவ முடியும் என்பதை ஜெயலலிதா விடம் நேரில் விளக்குவதற்காகவும் மத்திய சட்ட அமைச்சர் அருண் ஜெட்லி தூதராக செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார். தனது நிபந்தனைகளை ஏற்காவிட்டால் பாரதய ஜனதாவை விட்டுவிட ஜெயலலிதா முடிவுசெய்திருக்கிறார். அ.தி.மு.க., பா.ம.க., மற்றும் உதிரிக் கட்சிகளை கொண்ட 3 - வது அணி அமைத்து தேர்தலை சந்திப்பது என்று அவர் முடிவு செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# இது காட்டாற்று வெள்ளம்

சர்வதேச கிரிக்கெட் உலகின் சாதனைகள் என்பவை, எல்லோராலும் விரும்பப்படுபவை. எதிர்பார்க்கப்படுபவை. சாதனைகள் வீரர்களால் முறியடிக்கப்படுபவை. அதனூடாக சாதனைகள் நிலைநாட்டப்படுவன. ஆனால், இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், பல சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட வீரர்களால் தாம் விளையாடிக்கொண்டிருக்கும் கணத்தில் சாதனை பற்றி எதுவும் அறிந்திருப்பதில்லை. இத்துறை சார்ந்த புள்ளிவிபரவியலாளர்கள்

## 2003 டெஸ்ட் போட்டிகள்

### துடுப்பாட்டம்

| | ஆட்டம் | ஓட்டம் | அதிகூடியது |
|---|---|---|---|
| 1. ரிக்கிப் பொண்டிங் (அவுஸ்) | 11 | 1503 | 257 |
| 2. பிறைன் லாரா (மே.இ) | 10 | 1344 | 209 |
| 3. மத்தியூ ஹேய்டன் (அவுஸ்) | 12 | 1312 | 380 |

### பந்து வீச்சு

| | ஆட்டம் | ஓட்டம் | விக்கெட் | சிறப்புபந்துவீச்சு |
|---|---|---|---|---|
| 1. மக்காயா என்ரினி (தெ.ஆ) | 12 | 1566 | 59 | 5/66 |
| 2. ஸ்ருவட் மக்கில் (அவுஸ்) | 11 | 1688 | 57 | 5/56 |
| 3. முரளிதரன் (இலங்கை) | 7 | 849 | 48 | 7/46 |

## 2003 ஒருநாள் போட்டிகள்

### துடுப்பாட்டம்

| | ஆட்டம் | ஓட்டம் | அதிகூடியது |
|---|---|---|---|
| 1. யூசுப் ஜொகானா (பாக்) | 32 | 1168 | 106 |
| 2. ரிக்கி பொண்டிங் (அவுஸ்) | 34 | 1154 | 140* |
| 3. சச்சின் டெண்டுல்கர் (இந்தி) | 21 | 1141 | 152 |

### பந்து வீச்சு

| | ஆட்டம் | ஓட்டம் | விக்கெட் | சிறப்பு பந்துவீச்சு |
|---|---|---|---|---|
| 1. முரளிதரன் (இலங்கை) | 24 | 731 | 46 | 5/23 |
| 2. பிரட்லீ (அவுஸ்) | 24 | 926 | 46 | 5/30 |
| 3. என்ரினி (தெ.ஆ) | 23 | 816 | 45 | 4/24 |

தெரிவிக்கும் போதுதான் அவர்களே அறிந்து கொண்டு ஆகா அப்படியா என்பார்கள்.

சர்வதேசரீதியில் இவ்வருடம் அதிகமாகப் பேசப்படும் வீரரென்றால் அது அவுஸ்திரேலிய அணியின் ரிக்கி பொண்டிங்தான். அவுஸ்திரேலிய ஒருநாள் கிரிக்கெட் அணியின் தலைவர் இவர். நடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்தியாவுடனான நான்காவது டெஸ்ட் போட்டி முடிந்ததும் ஸ்ரீவ்வோவிடம் இருந்து எவ்விதமான சர்ச்சைகளும் இன்றி இயல்பாகவே டெஸ்ட் அணியின் தலைவராகப் போகிறவர்.

இவ்வருடம் நடைபெற்ற உலகக் கிண்ண இறுதிப்போட்டியில் இந்திய அணியிடம் இருந்து 140 ஓட்டங்களைப் பறித்துக் கொண்டதுடன் சாம்பியன் கிண்ணத்தையும் தக்கவைத்துக்கொண்டவர்.

# விளையாட்டு அரங்கம்



வருட இறுதியினதும் இன்னும் சில மகிழ்ச்சிகரமான குறிப்புகளுக்குச் சொந்தக்காரர் ஆகிறார் இவர். கடந்த மார்ச் மாதத்தில் மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிராக இரட்டைச் சதமொன்றை முதன்முதலாகப் போட்ட இவர். இப்போது இந்தியாவுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஒரு இரட்டைச் சதம் (242), தொடர்ந்து மூன்றாவது டெஸ்ட்டில் இன்னொரு இரட்டைச்சதம் (257) போட்டுள்ளார். டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஒரு வருடத்தில் மூன்று இரட்டைச்சதங்களைப் பெற்றவர்கள் இருவர் மட்டுமே. ஒருவர் டொன் பிரட்மன் (1934) அதனை அடுத்து ரிக்கி பொண்டிங். இருவருமே அவுஸ்திரேலியர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



இது எனது வசந்தம் ரிக்கி பொன்ரிங்

இன்னொருபுறம் இவ்வருடத்தில் அவுஸ்திரேலிய வீரர்கள் என்றவகையில் மத்தியூ ஹேய்டன் டெஸ்ட் போட்டிகளில் சேர்த்திருந்த 1391 ஓட்டங்கள் தாண்டி நிற்கிறார். அத்தோடு சர்வதேச நிலையில் இங்கிலாந்தின் அணித்தலைவர் மைக்கல் வோன் கடந்த வருடம் சேகரித்துப் பெருமை பெற்ற 1481 என்ற எண்ணிக்கையையும் தாண்டிவிட்டார். ஒருவருடத்தில் அதிகூடிய டெஸ்ட் ஓட்டங்கள் பெற்றவர்கள் என்றவகையில், இவர்கடக்க வேண்டிய இலக்குகள் இரண்டு. 1976 இல் மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர் விவியன் ரிச்சட்ஸ் சேகரித்தவை 1710 மற்றும் இந்திய வீரர் சுனில் கவாஸ்கர் சேகரித்தவை 1555.

பொன்ரிங் முறியடித்த இன்னொரு ஓட்டச்சாதனையும் உண்டு. ஒருநாள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் ஒருவருடத்தில் கூடுதலான ஓட்டங்கள் என்றவகையில், 1999 இல் இந்தியவீரர் ராகுல் ராவிட் 2626 ஓட்டங்கள் பெற்றிருந்தது ஒரு சாதனையாக இருந்தது. அதுவும் இப்போது முறியடிக்கப்பட்டுவிட்டது. இப்போது இந்தியாவுக்கு எதிரான நான்காவதும், இறுதியானதுமான டெஸ்ட் போட்டி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. புள்ளிவிபரவியலாளர்கள் கண்ணுக்குள் எண்ணெயை விட்டுக்கொண்டிருப்பார்கள் நிச்சயம் ரிக்கிபொண்டிங் ஏதாவது செய்து வைத்திருப்பார்.

**ரோஜா**

---

# எல்லை தாண்டிய தண்ணீர்

சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை என்பது, முரளிக்கு எதிர்நீச்சல் தான். மைதானத்தில் அல்ல. மைதானத்துக்கு வெளியே அண்மையில் நடந்து முடிந்த இங்கிலாந்து - இலங்கை டெஸ்ட் போட்டித்தொடரில், இங்கிலாந்து தோல்வியுற்றதைவிட கூடுதலாகசிலருக்கு உறுத்தலாக இருப்பது முரளியின் விக்கெட் எடுக்கும் வேகம்தான். இம்முறை முன்னாள் இங்கிலாந்து அணித் தலைவர் மைக் அதர்டன் இன்றைய இங்கிலாந்தின் அணிவீரர் - முன்னாள் தலைவர் - நஸார் ஹுசேன் மற்றும் புகழ்பெற்ற சுழல்பந்து வீச்சாளர் முன்னாள் இந்திய அணித்தலைவர் பிஷன்சிங் பேடி ஆகியோர் அவதூறுக் கண்டனங்களை வாசித்துள்ளார்கள்.

இந்தவிடயம் தொடர்பில் ஒரு கிரிக்கெட் விமர்சகரின் கருத்துக்கள் சில வினாக்களை எழுப்பிச் செல்கின்றன. இந்தமூவரும் ஒரு விடயத்தை மேலாதிக்கம்செய்ய நினைக்கிறார்கள் என்பது புரிகிறது. அதாவது சர்வதேசக் கிரிக்கெட் சபை (ICC) முரளியிள் பந்து வீச்சுத்தொடர்பில் அக்குவேறு



அறுநூறு விக்கெட் நிச்சயம் முரளிதரன்

ஆணிவேறாக ஆராய்ந்து, அவரது பந்துவீச்சில் பிழைஏதும் இல்லை என்று அறிவித்த பின்னும், இந்தமூவரும் ஏன் 'குத்திமுறிகிறார்கள்' என்பது தெரியவில்லை என்கிறார் விமர்சகர். இதேவேளை, இந்த மூவரும் இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா அணிவீரர்களில் ஒருவர் முரளியின் பாணியில் பந்து வீசியிருந்தார். இப்படித்தான் ரைவாக்கினா என்பவர் இங்கிலாந்தின் பந்துவீச்சாளர் ஜேம்ஸ் கேட்லி பற்றி மௌனம் சாதிக்கிறார்களே என்கிறார்கள். இந்தவிடயத்தில் பிஷக்சிங் பேடி அயல் நாட்டவராக இருந்தும், இப்படி அவமதிப்பு செய்யக்காரணம் அவரது காழ்ப்புணர்ச்சி தவிர வேறெதுவாகவும் இருக்கமுடியாது என்கிறார்.

இப்படியானதொரு இடைவெளியின் பின், மீண்டும் இந்த மூவரும் முரளியின் பந்துவீச்சு பற்றிய சர்ச்சைகளைக் கிளப்புகிறார் என்றால், அதற்குக் காரணம் முரளியை அதைரியப்படுத்தி ஆற்றலை மழுங்கடிக்கச் செய்வதற்கே ஆகும் என்பது, விமர்சகரின் கருத்து. ஆனால், இந்தத் தொடரில் முரளி ஆட்டத்தொடர் நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டிருப்பது அவரது மனத்தைரியத்துக்கு நல்லதொரு உதாரணம் என்றும் கூறுகிறார்.

இன்றும் கூட எம்மில் சிலர் மேற்குலகில் மட்டும்தான் சாதனை வீரர்கள் உருவாகமுடியும் என்று நினைக்கிறார்கள்போல இருக்கிறது என்று, ஆதங்கப்படும் இவர், மூன்றாம் உலகநாடுகளின் அதிவீரர்கள் பற்றி எடுத்துக்காட்டுகிறார். உலகின் பல தலைசிறந்த வீரர்கள், முரளியின் பந்தைச் சமாளித்திருக்கிறார்கள். ஏன் நிறைய ஓட்டங்களைக்கூட எடுத்திருக்கிறார்கள். அப்போதெல்லாம் முரளியின் முறை இவர்களுக்குத் தெரிவதில்லை. ஆனால் முரளி விக்கெட்டுக்களை வரிசையாக சாய்க்கும்போது மட்டும், முரளியை அவமதிக்க முனைகிறார்கள். இது என்ன நியாயம் என்பது விமர்சகரின் வினா. விடயங்கள் நியாயமானவை. ஆனால் விமர்சகரே கூறுவதுபோல 'காய்கிற மரம் தான் கல்லெறிபடும்' இது இயற்கையின் நியதி.

**வெரோணிக்கா**

---

# விரைவில் எதிர்பாருங்கள்

மைக்கல் ஹோல்டிங் இலங்கை - இங்கிலாந்து போட்டித்தொடரின்போது இலங்கையில் இருந்தார். அவர் முரளியைப் பாராட்டிப்பேசும்போது, 2003 இல் சச்சின் டெண்டுல்கரை விட, முத்தையா முரளிதரன் கூடியஓட்டங்கள் பெற்றிருந்தார் என்று பாராட்ட சச்சின் ரசிகர்களுக்கு அது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி விட்டது. ஒப்பீட்டடிப்படையில் பார்க்கும்போது, இவ்வருடம் இவர் கருத்துக்கூறும்வரை 7 ஆட்டங்களில் 109 ஓட்டங்களைச் சச்சினும், 9 ஆட்டங்களில் 113 ஓட்டங்களை முரளியும் எடுத்திருந்தனர் என்பது உண்மையே. அத்தோடு இறுதியாக சச்சின் விளையாடிய 13 டெஸ்ட் போட்டிகளில் எட்டுப் போட்டிகளில் இரட்டைத்தானத்தையடைய முடியவில்லை என்பதும் உண்மை. இதேபோல தனது பதினேழாவது வயதில்



பரிமாணங்கள் பலவுண்டு சச்சின்

முதல் ஐந்து டெஸ்ட் போட்டிகளிலும் சச்சின் பெற்றிருந்தது 153 ஓட்டங்கள் மட்டும்தான். இதேவேளை இந்த வருடம் நடைபெற்ற ஒருநாள் போட்டிகளில் அதிகூடிய ஓட்டத்தொகை 673 ஓட்டங்கள் பெற்றவர் சச்சின்தான் என்பதை ஏனோ எல்லோரும் மறந்து விடுகிறார்கள்.

இப்போதுள்ள பிரச்சினை - சச்சின் குறைவாக ஓட்டம் பெறுகிறார் என்பதல்ல. தற்போது அவுஸ்திரேலிய ஆட்டங்களில் அவர் ஆட்டமிழந்தமுறைதான். ஒருதடவை நடுவரின் முடிவால் பாதிக்கப்பட்டவர். மிகுதி நான்கு முறையும் தனது கவனயீனத்தாலேயே ஆட்டமிழந்தார் என்கின்றனர் அவதானித்தவர்கள்.

இப்படியான தளர்வுகள் ஏற்படுவது சகஜம்தான். ஆனால், விரைவில் மீண்டும் சச்சின் பழைய நிலைக்குத் திரும்புவார் என்கிறார் டிராவிட். கபில்தேவ் கூட அவரைத் தொல்லைப்படுத்தாதீர்கள், பழைய நிலைக்கு அவர் இயல்பாகவே திரும்புவார் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார். இதேபோன்றதொரு நிலை 1996 - 1997 இல் கூட ஒருமுறை ஏற்பட்டது. அவுஸ்திரேலியா - தென்னாபிரிக்காவிற்கு எதிரான மொத்தம் பத்து டெஸ்ட் போட்டிகளில், சச்சின் ஒரேயொரு அரைச்சதம் மட்டுமே பெற்றிருந்தார். ஆனால் அடுத்து தென்னாபிரிக்காவிற்கு எதிராக 169 ஓட்டங்களைப் பெற்றதையும் மறக்கமுடியாது. இதே நிலையொன்றை விரைவில் எதிர்பார்க்கலாம் என்கிறார்கள் விமர்சகர்கள். கங்கூலி மிகுந்த நம்பிக்கையுடன் சச்சினின் எழுச்சியைக்காண காத்திருப்பதாக கூறுகிறார். முத்தாய்ப்பாக கிரெய்க் செப்பலின் கருத்தைக் கூறலாம். "மூன்றாவது டெஸ்ட் போட்டியில் சச்சின் பெற்ற 44 ஓட்டங்கள் இத்தொடரில் அவர் முன்னர் விளையாடிய ஆட்டங்களில் இருந்து வேறுபட்டது. சிறந்ததொரு இன்னிங்ஸ் இறுதி டெஸ்ட்டில் சச்சின் அமைக்கக்கூடும் என்கிறார் அவர்.

சச்சின் 110 டெஸ்ட் போட்டிகளில் 8964 ஓட்டங்கள் அதில் 31 சதங்களும், 36 அரைச்சதங்களும் பெற்று சாதனைகளை நோக்கிச் சென்றுகொண்டிருப்பவர். தற்போதைய நிலை சச்சினுக்கு தற்காலிகப் பின்னடைவே ஒழிய தோல்வியல்ல.

**நிர்மலன்**

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

இதுதான் உலக இயற்கை, ஒருமுறை தோற்றவன் மறுமுறை வெல்வான், வென்றவன் தோற்பான், விழுபவன் எழுவான், எழுந்தவன் விழுவான் - இதுதான் இயற்கையின் நியதி. இந்த உலகில் நிதம் நிதம் நடக்கும் நிகழ்ச்சி.

இந்த வார்த்தைகள் தத்துவவாதிகளுக்கு உரியவை. இவை இப்போது யாரிடமிருந்து வருகிறது என்று சிந்தித்தால், அது தத்துவஞானிகளிடமிருந்து அல்ல. நிச்சயம் தற்போதைய நிலையில் இந்திய கிரிக்கெட் ரசிகர்களின் வாயில் இருந்துதான் வருகின்றன.

கிரிக்கெட் ஆட்டத்தின் சிறப்பியல்பே இதுவாகத்தான் இருக்கும். ஒரு ஆட்டத்தின் இறுதிப் பந்துப் பரிமாற்றத்தில் அதாவது ஓவரில் வீசப்படும் கடைசிப் பந்தில்கூட வெற்றி நிச்சயிக்கப்படுகின்ற சந்தர்ப்பங்கள் இந்த விளையாட்டில் அதிகம்.

ஆகவே, ஒரு போட்டி நடைபெறுவதற்கு முன்னர், இந்த அணிதான் வெற்றிபெறும் என்று உறுதியாகக் கூறமுடியாது.

# ஆசை யாரை விட்டது

ஆயினும், ஒரு அணிக்கு சார்பானவர்கள் அந்த அணி வெற்றிபெறுவதில் மிகுந்த ஆர்வமுடையவராயிருப்பர். அணியின் சிறந்த வீரர்களை கணக்கிட்டு வெற்றிபெறும் அணி பற்றிய முடிவைத் தெரிவிப்பர்.

அவை போதாதுவிடில், போட்டிகள் நடைபெறுவதற்கு முன்னர், ஒரு அணியின் வெற்றிவாய்ப்பு எப்படி இருந்தது என்று கணிப்பிட்டு, அதன்மூலமாக வெற்றிபெறும் அணியைத் தீர்மானிக்கலாம்.

இந்த இறுதியாகக் கொல்லப்பட்ட செயல்தான் அவுஸ்திரேலிய - இந்திய கிரிக்கெட் டெஸ்ட் தொடரின் மூன்றாவது ஆட்டத்தில் நிகழ்ந்தது. இந்திய அணி 2 ஆவது டெஸ்ட் போட்டியில், தனது பலத்தை வெளிப்படுத்தி அவுஸ்திரேலியாவை வென்றது. ஆகவே, மூன்றாவது போட்டியில் இந்திய அணிக்கே வெற்றிவாய்ப்பு அதிகம் என்று எதிர்பார்க்கப்பட்டது. இந்திய ரசிகர்கள் எதிர்பார்த்தனர்.

இநதிய அணியில் சிறந்த வீரர்களான, ராவிட் - இரட்டைச் சதம் அடித்தவர். சச்சின்- நட்சத்திர துடுப்பாட்ட வீரர், கங்குலி, ஷேவாக் அணியின் வீரர்களின் பலம் மதிப்பிடப்பட்டது. இந்திய அணிக்கே வெற்றி என்று இந்திய ரசிகர்கள் முடிவுசெய்துகொண்டார்கள்.

ஆனால், ஒன்றை கணிப்பிட மறந்துபோய்விட்டார்கள் அதுதான், 'ரிக்கிபொண்டிங்' என்ற அவுஸ்திரேலியக் குதிரை. தாம் நேசிக்கும் அணியின் பலத்தை மதிப்பிட்டவர்கள் எதிரணியின் பலத்தை மதிப்பிடத் தவறிவிட்டனர்.



ஆபத்தான பேர்வழிகள்

எதிரணியின் தோல்வியிலும்கூட இரட்டைச் சதம் அடித்த வீரர் 'ரிக்கிபொண்டிங்', அவரை மறந்து - புயலெனப் பந்துவீசும் அவுஸ்திரேலிய அணியின் பந்து வீச்சாளர்களை மறந்து இந்திய ரசிகர்கள் - இந்திய அணியின் 2 ஆவது போட்டி வெற்றி மயக்கத்தில் அடுத்த போட்டியையும் வெற்றி பெற்று, இறுதிப் போட்டியை சம நிலையில் முடித்தாலும் பரவாயில்லை என்று கருதினர். 2 ஆவது போட்டியில் வெற்றிபெற்றதும் அடுத்து வரும் 3 ஆவது 4 ஆவது போட்டிகளை சமநிலைப்படுத்தினாலும் பரவாயில்லை என்று சிந்தித்தவர்களும் உண்டு. அவர்களின் கனவுகளை, எதிர்பார்ப்புக்களையெல்லாம் பொய்யாக்கி முடிந்துள்ளது, இந்திய அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையேயான மூன்றாவது டெஸ்ட் போட்டி.

மூன்றாவது டெஸ்ட் போட்டி அமைந்த விதத்தைப் பார்க்கும்போதுகூட, அதில் ஒன்று புலனாகியது. முதல் நாள் ஆட்டத்தில் ஷேவாக்கின் 195 - இந்திய அணி அடுத்த போட்டியையும் வென்றுவிடும் என்ற நம்பிக்கையைத் தந்தது. 2 ஆவது நாள் ஆட்டம் இந்திய அணி முதலாவது போட்டியிலும், 2 ஆவது போட்டியின் முதல்நாள் ஆட்டத்திலும் பெற்ற உயர்ந்த நிலையினால் கொண்ட வெற்றிமமதை தெரிந்தது. மூன்றாவது நாள் ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணியின் 'ரிக்கிபொண்டிங்' ஆட்டம் அவுஸ்திரேலியாவின் வெற்றிவாய்ப்பை உருவாக்கியது.

நாலாவது நாள் ஆட்டம் இந்திய அணியின் ஒரு போட்டியில் மட்டுமே வெல்வதற்கு விளையாடியது என்ற உணர்வைத் தந்தது. அவுஸ்திரேலிய அணியின் வெற்றியும் உறுதிசெய்து கொள்ளப்பட்டது. ஐந்தாவது நாள் ஆட்டத்தில் அவுஸ்திரேலிய அணி வென்று... வேன்றே விட்டது!

ஆனாலும் டெஸ்ட் தொடரில் இந்தியாவிற்கு சமநிலையில்தான் அவுஸ்திரேலிய அணி உள்ளது. தலா ஒரு போட்டியில் வென்று, இரு அணிகளுமே தாங்கள் பலமான அணியென்று நிரூபித்துள்ளனர். ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்கள் அல்ல என்று காட்டியுள்ளனர்.

இந்த நிலையில், இந்திய ரசிகர்களிடம் மீண்டும் வருவோம் - அவர்களின் எண்ணம் இப்போது என்னவாக இருக்கும் என்று நாடி பிடித்துப் பார்ப்போம். அது கட்டாயம் இதுவாகத்தான் இருக்கும்.

அது இந்திய அணி அடுத்தபோட்டியை வெல்லும். வென்று டெஸ்ட் தொடரைக் கையில் பற்றும். அவ்வாறு கைப்பற்றுவதன்மூலம், உலகின் தலைசிறந்த அணி என்ற பெயரை தனதாக்கிக் கொள்ளும் என்பதாகும்.

அவுஸ்திரேலியர்களைப் பொறுத்தளவில் ஸ்ரீவ்வோ இந்தப் போட்டியோடு ஓய்வு பெறப்போவதாக அறிவித்துள்ளார். அவரின் தலைமையில் விளையாடுகின்ற இந்தப் போட்டியை வெல்வதன்மூலம் - டெஸ்ட் தொடரைவென்று, உள்ளூரில் நடைபெறும் போட்டித் தொடர் ஒன்றில் தோல்வியடையாமல் இருப்பது என்ற எண்ணத்துடனும், ஸ்ரீவ்வோவிற்கு பெருமை தேடிக்கொடுக்கும் விதத்தில் டெஸ்ட் தொடரை வெல்வது என்ற வகையில் இப்போட்டி தனது வெற்றியாகவே அமையவேண்டும் என எதிர்பார்க்கிறது.

இந்த எதிர்பார்ப்புக்களோடு நடைபெறுகின்ற நாலாவது டெஸ்ட் போட்டி சுவாரசியமாக இருக்குமா? சம நிலையில் முடியுமா? மழை தேவன் குறுக்கிடுவானா? பொறுத்திருந்துதான் பார்ப்போம்

- வெண்மதி

# ஆறு முத்தான பந்துவீச்சாளர்கள்

B.B.C Sports - 2003 இல் நடைபெற்ற அனைத்துப் போட்டிகளிலும் பந்துவீச்சாளர்களின் திறமையை மதிப்பிட்டு அதில் அதிசிறந்தவர்களென அறுவரைத் தெரிந்தெடுத்துள்ளது.

### அன்டிகெடிக்



இவ்வருட ஆரம்பத்தில் - அவுஸ்திரேலியாவில் நடைபெற்ற ஆஷஸ் டெஸ்ட் போட்டித் தொடரில், இறுதி டெஸ்டில் இவரது பந்துவீச்சு, பலம்மிக்க அவுஸ்திரேலிய அணியை இங்கிலாந்திடம் தோல்வியுறச்செய்தது. இவர் அந்த ஆட்டத்தில் 94 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களைச் சரித்தார். இவர் சரித்தவர்களுள் முக்கியமானவர்கள் ஜஸ்ரின் லேங்கர், ரிக்கிபொன்ரிங் முதல் இனிங்சில் சதம் அடித்த ஸ்ரீவ்வோ ஆறு ரண்ணுடன் மற்றும் கில்கிறிஸ்ட் இவரின இந்தப் பந்து வச்சே அவுஸ்திரேலியாவை அவுஸ்திரேலிய மண்ணிலேயே மண்கௌவ வைத்தது.

### அன்டி பிக்கல்



உலகக் கிண்ணப் போட்டிகளில் இங்கிலாந்துக்கு எதிரான. ஒரு போட்டியில் ஆட்டத்தின் விதியை மாற்றியமைத்தார் இவர். அவுஸ்திரேலியா எல்லா ஆட்டங்களையும் இலகுவாக வென்றாலும், சுப்பர் சிக்ஸ் தகுதிக்கு நுழையும் நிலையில் ஒரு தடங்கலை இங்கிலாந்து ஏற்படுத்தியது. அன்டிபிக்கல் பந்தைக் கையில் எடுத்தவேளை, இங்கிலாந்தின் ஓட்ட எண்ணிக்கை விக்கெட் இழப்பின்றி அறுபத்தாறு ஆக இருந்தது. இந்நிலையில் அன்டி பிக்கலின் பந்து வீச்சு இங்கிலாந்தின் நிலையை ஐந்து விக்கெட் இழப்பிற்கு 87 ஓட்டங்கள் என்ற நிலைக்குச் சரித்துவிட்டது. இங்கிலாந்து இறுதியில் எட்டு விக்கெட் இழப்பிற்கு 204 ஓட்டங்கள் மட்டும் பெற்றது. அன்டி பிக்கலின் பந்துவீச்சு இருபது ஓட்டங்களுக்கு ஏழு விக்கெட் என்றவாறு அமைந்தது. ஆனால், அவுஸ்திரேலியா மறுவளமாக 8 விக்கெட் இழப்பிற்கு 135 ஓட்டங்கள் எடுத்துப் பதற்றப்பட்டநிலையில் பிக்கல் முப்பத்தாறு பந்துகளில் 34 ஓட்டங்கள் எடுத்து அவுஸ்ரேலியாவைக் கரைசேர்த்தார்.

### ஜேர்மயின் லோசன்



கடந்த மே மாதம் அன்ரீகுவாவில் நடைபெற்ற மேற்கிந்திய அவுஸ்திரேலிய நான்காவது டெஸ்ட் போட்டியில், இவரது பந்து வீச்சு அபாரமாக அமைந்தது. இவரது பந்துவீச்சு இயல்பாகவே மணிக்கு 90 மைல் என்ற வேகத்துக்கு மேற்பட்டே இருக்கும். இவர் அன்ரீகுவா ஆட்டத்தில் எடுத்த எழுபத்தெட்டு ஓட்டங்களுக்கு ஏழு விக்கெட்டுக்கள் மேற்கிந்திய அணிக்கு வெற்றியைக் கொடுத்தது. இந்த ஆட்டத்தில்தான் இவரது பந்து வீச்சு முறைபற்றிய சர்ச்சைகளும் எழுந்தன. இவர் மீண்டும் விரைவில் அணிக்குள் வருவார் என்று எதிர்பார்க்கப்படுகிறார்.

### கொரி கொலிமோர்



மேற்கிந்தியத் தீவுகளில் இலங்கைக்கு எதிரான டெஸ்ட் போட்டியிலும், தொடரிலும் வெல்வதற்கு இவரது பந்துவீச்சு காரணமாக அமைந்தது. இவர் ஆரம்பவரிசை இலங்கை வீரர்களைச் சரித்ததன் மூலம் இலங்கை அணியை ஒரு கட்டுக்குள் கொண்டுவந்தார். பார்படோஸ் தீவைச்சேர்ந்த இவர், ஆறு டெஸ்ட் போட்டிகளில் மட்டும் விளையாடி குறைந்த அனுபவம் உடையவர். இவரது பந்து வீச்சு இவருக்கு 57 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களைக் கொடுத்தது.

### முத்தையா முரளிதரன்



கடந்த மாதம் இங்கிலாந்து இலங்கைக்கு இடையில்நடைபெற்ற முதலாவது டெஸ்ட் போட்டியில் நாற்பத்தாறு ஓட்டங்களுக்கு ஏழு விக்கெட்டுக்களைச் சரித்தார். இதற்கு முன்னதாக இரண்டு டெஸ்ட் தொடர்களிலும் இங்கிலாந்து வெற்றி கண்டிருந்த நிலையில் இம்முறை தொடரை இலங்கை வெல்வதற்கான வலுவான காரணியாக அமைந்தவர் முரளிதரன். இவர் இந்தத் தொடரில் சரித்த விக்கெட்டுக்கள் மொத்தம் 26. உண்மையில் இலங்கை மூன்று டெஸ்ட் போட்டிகளிலும் வென்றிருக்கவேண்டும். ஆனால் மூன்றாவதிலேயே அபாரமானதொரு வெற்றியைக் காட்டமுடிந்தது.

### சோஹெய்ப் அக்தார்



நியூஸ்லாந்துக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் வென்றிருக்காது. ராவல்பிண்டி எக்ஸ்பிரஸ் இருந்திராவிட்டால் கணிசமான ஓட்ட வித்தியாசத்துடன் பலமாக இருந்த நியூஸ்சிலாந்து இரண்டாவது இனிங்சில் பெற்ற ஓட்டங்கள் நம்ப முடியாதபடி 103 மட்டுமே. இந்தச் சரிவுக்குக் காரணம் அக்தார். இந்த ஆட்டத்தில் மொத்தம் பதினொரு விக்கெட் சரித்த இவர், இரண்டாவது இனிங்சில் 30 ஓட்டங்கள் மட்டும் கொடுத்து, ஆறு விக்கெட்டுக்களைச் சரித்தார். இந்தச் சுற்றுப் பயணத்தின் முதலாவது ஆட்டமாக இவருக்கு இது இருந்தாலும், பாகிஸ் தானின் வெற்றிக்கு அச்சாணியாக இருந்துவிட்டார்.

நன்றி B.B.C. Sports

# சோடைபோகாத சுற்றுப்போட்டி



தூரவிலக்க முடியாது ரஸல் ஆர்னல்ட்

மூன்று சர்வதேச டெஸ்ட் தொடர்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கும், அதோடு நான்காவது தொடர் முடிவடைந்துள்ள நிலையில், கிரிக்கெட் ரசிகரிகளின் கவனம் முழுவதும் இத்தொடர்களிலேயே சங்கமமாயிற்று. இதனாலதானோ என்னவோ கொல்கத்தா, ஈடன்கார்டன் மைதானத்தில் மூன்று நாடுகள் பங்குகொண்ட 'A' அணிகளுக்கிடையிலான ஒருநாள் போட்டிகள் கண்டுகொள்ளப்படாமலே போய்விட்டன. பங்குகொண்ட நாடுகள் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான். இந்திய அணியின் தலைவர் ஹேமங்பதானி, இலங்கை அணித்தலைவர் ரசல் ஆர்னல்ட், பாகிஸ்தான் அணித்தலைவர் சாகிட் அப்ரிடி. இநதப் பெயர்கள் எதுவும் கிரிக்கெட் ரசிகர்களுக்கு புதியவையல்ல.

உண்மையில் A' அணி என்பது அடுத்த கட்டமாக தேசிய அணியின் பங்கு கொள்ளும் வாய்ப்புள்ளவர்கள் மற்றும் தேசிய அணியில் விளையாடி புடம்போடப்படுவதற்காக இவ்வணியில் சேர்க்கப்பட்டவர்கள்.

இந்த வகையில், ஒவ்வொரு அணியும் நான்கு லீக் ஆட்டங்களில் கலந்து கொண்டன. இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றவை இந்திய - இலங்கை அணிகள். இந்தப் போட்டியில் இலங்கை அணி சிறப்பான வெற்றியொன்றைப் பெற்றுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 44.4 ஓவர்களில் 197 ஓட்டங்களுடன் ஆட்டம் இழந்தது. முகமது கைவ் காயப்பட்டதன் காரணமாக, இடம்பிடித்த சிறிதரன் சிறிராம் 65 ஓட்டங்கள் பெற்று, ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார். மற்றும் துடுப்பெடுத்தாடிய வீரர்களின் வரிசை கம்பீர், சஞ்சய் பங்கர், ஹேமங்பதானி, யுவராஜ்சிங், டினேஸ் மொங்கியா, அஜேய் ரட்ரா, முனாப் பட்டேல் என்று நீள்கின்றது. மறுபுறம் இலங்கை அணியைச் சேர்ந்த 17 வயது பாடசாலை மாணவன் மஃரூப் 39 ஓட்டங்கள் மட்டும் கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி இந்தியாவின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தார்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இலங்கை 'A' அணி 33.4 ஓவர்களில் மூன்று விக்கெட் மட்டும் இழந்து வெற்றி இலக்கைத் தாண்டியது. இதில் தேசிய அணியில் இருந்து சிறிது விலக்கப்பட்டிருக்கும் ரஸல் ஆர்னல்ட் முழுத் தொடரிலுமே அபாரமாக விளையாடியுள்ளார். அதோடு அவரே சுற்றுப்போட்டியின் நாயகனும்கூட. இதன்காரணமாக அவர் தேசிய அணிக்குள் மீண்டும் நுழையும் வாய்ப்பு பிரகாசமாகியுள்ளது. மறுபுறம் இந்திய 'A' அணியின் பங்குகொண்ட பதானி, பங்கர், கைவ் மற்றும் யுவராஜ்சிங் ஆகியோர் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ள, முத்தரப்பு ஒருநாள் சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்ள அவுஸ்திரேலியா புறப்பட்டுள்ளனர்.

மக்டலின்

Sports Sports Sports Sports Sports Sports Sports Sports Sports

# ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழ் இந்துக்கள் தமது பாரம்பரியங்களைப் பாதுகாக்க பாடுபடுகின்றனர்

## சுவீடன் நாட்டுப் பேராசிரியர் பீட்டர்ஷால்க்

(யாழ்ப்பாணம்)

ஐரோப்பாவில் வாழ்ந்துவரும் தமிழ் இந்துக்கள் தமது பாரம்பரியங்களைப் பாதுகாப்பதற்குப் பெரும் பாடுபட்டு வருகின்றனர் என, சுவீடன்நாட்டுப் பேராசிரியர் பீட்டர்ஷால்க் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில், நேற்றுமுன்தினம் 'ஐரோப்பிய நாடுகளில் வாழும் தமிழ் இந்துக்களின் சமூகச்சிக்கல்கள்' என்னும் தலைப்பில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் தெரிவித்ததாவது -

ஐரோப்பிய நாடுகளில் குடியேறி வாழ்கின்ற இவர்கள், தம்மிடையே பல வேறுபாடுகளைப் பேணிவருவதில் கவனமாக உள்ளார்கள். இது அவர்களது பாரிய குறைபாடாகும்.

மிக முக்கியமாக - இங்கு பேணிய சில உயர்வு, தாழ்வு நிலைகளை அங்கும் பேண எண்ணுகின்றனர். அதுமட்டுமன்றி, அங்கு சென்றோரில் மீகநீண்டகாலம் வசிப்போர், அண்மைக்காலங்களில் அங்கு சென்று குடியேறியோர் என்ற பாகுபாட்டையும், குடியுரிமை பெற்றோர், குடியுரிமை பெறாதோர் என்ற பிரிவினையையும் கையாள்கின்றனர். இது மனவேதனைக்குரிய விடயமாக இருக்கின்ற போதிலும், அவர்கள் தமது மதம் சார்ந்த, பண்பாடு சார்ந்த விடயங்களைப் பேணுவதில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றமை வரவேற்கத் தக்கவிடயமாகும்.

தாம் வாழ்கின்ற பகுதிகளில் இந்து ஆலயங்களை அமைப்பதில் மிகவும் முக்கியமான பங்கினை வகித்து வருபவர்கள் ஈழத்து இந்துக்களாவர். இந்த விடயத்தில் அவர்கள் ஒற்றுமையுடன் செயற்பட்டு வருகின்றனர்.

ஜேர்மனியின் ஹேம் நகரிலுள்ள காமாட்சி அம்மன் கோயில், ஐரோப்பிய நாடுகளிலுள்ள இந்து ஆலயங்களில் மிகப்பெரியது. இது இந்துக்களின் அரிய ஒற்றுமையின் பயனாக உருவானது.

ஐரோப்பிய நாடுகளிலுள்ள மக்களைப் பொறுத்தவரையில் இந்துக்களின் வழிபாட்டு முறைகளை அவர்கள் புதுமையான ஒன்றாகப் பார்க்கின்றார்களேயன்றி, அதனை ஒருபோதும் புறக்கணிக்கவில்லை.

இந்த நாடுகளில் குடியேறியவர்களில் - முதலாம் தலைமுறை இந்துக்கள் கொண்டுள்ள தமது மதம், கலாசாரம் மீதான பற்றினை, தற்போதைய இரண்டாம் தலைமுறையினர் பேணுவதில்லை.

இந்துப் பண்பாட்டைப் பேணும் ஓர் விடயமாக அங்குள்ள இந்து, தமிழ்ப்பெண்கள் சேலை அணிகின்றனர். ஆனால், ஆண்கள் எவரும் வேட்டி அணிவதைக் காண முடியவில்லை.

சுவிற்சர்லாந்ததைப் பொறுத்தவரையில் 37 ஆயிரம் இந்துக்கள் அங்கு வாழ்கின்றார்கள். அதேவேளை, 19 இந்து ஆலயங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று இந்து மதத்தை இணையத்தினூடான செயற்பாடுகளுக்கு இட்டுச்சென்ற பெருமையும் ஐரோப்பிய வாழ் இந்துக்களுக்கும் உரியது.

திருமண விடயத்தில் அந்தந்த நாட்டவரைப்போல் விவாகரத்துச் செய்துகொள்ளும் முறையும் அங்கு வாழும் இந்துக்கள் மத்தியில் அதிகரித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இந்தநிலை தொடருமானால், வெளிநாட்டில் வாழும் இந்துக்களின் கலாசாரமும், பண்பாடும் தொடர்ந்தும் பேணப்படுமா என்பது கேள்விக்குறியாகவே அமைந்துவிடும் என அவர் மேலும் தெரிவித்தார். (ப)

# வீதி புனரமைப்பு வேலையை துரிதப்படுத்த வீதி மட்டமாக்கும் இயந்திரத்தை தந்துதவவும்

## யாழ். வீதி அபிவிருத்தி அதிகாரசபை கோரிக்கை

வீதி மட்டமாக்கும் இயந்திரமொன்றை தந்துதவும்படி, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் யாழ். மாவட்ட அலுவலகத்தினர் பொது முகாமையாளரைக் கேட்டுள்ளனர். கடந்த டிசம்பர் மாதம் 17 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற விசேட கூட்டம் ஒன்றிலேயே, இந்தக் கோரிக்கையை யாழ்.மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபை பிரதம பொறியியலாளர் ஜே.சிறினிவாசன் விடுத்துள்ளார்.

இந்த இயந்திரம் நீண்டகாலமாக இல்லாத காரணத்தினால், வீதிப்பராமரிப்பு வேலைகளை செய்வது கடினமாக இருப்பதாகவும், அதனால் பெரும்பாலான வீதிகளின் அருகே பற்றை மண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த இயந்திரத்தின்மூலம், வீதிகளைச் சரியானமுறையில் மட்டமாக்க முடியுமெனவும், அதனால் வீதிகளின் கரைகளிலே வெள்ளம் தேங்கிநிற்பது, மேலும் பள்ளமான வீதிகள் இருப்பது என்பன சீர்செய்யபபடுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வீதிகளுக்கு அருகே வெள்ளம் வடிந்து செல்லும் கால்வாய்களை, கான்களை வெட்டும்போது, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் ஊழியர்கள் - தனியாரினால் நெருக்கடிகளைச்சந்திக்கவேண்டியுள்ளது. மட்டமாக்கும் இயந்திரத்தைப் பயன்படுத்தி, வீதிகளைச் செப்பனிடுவதன் மூலமாக அதனைத் தவிர்க்கமுடியுமெனவும் வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ச)

## சாவற்கட்டில் கோழிகள் திருட்டு

சாவல்கட்டில் வசிக்கும் தர்மலிங்கம் என்பவரது வீட்டில் இரவு வேளையில் புகுந்த திருடர்களால் சுமார் 15 கோழிகள் ஒரேதடவையில் திருடப்பட்டுள்ளன.

குறிப்பிட்ட நபர் சத்திரசிகிச்சையினை மேற்கொண்டுவிட்டு, உடல் காயத்தினாலும் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த சமயம் இதனை அவதானித்த திருடர்கள் இரவு வேளையில் வீட்டினுள் புகுந்து தமது கைவரிசையினை காட்டியுள்ளனர்.

## துடுப்பாட்டம்

புதுவருடத்தை முன்னிட்டு ரோட்டறிக் கழகங்களுக்கிடையில் நடைபெற்ற துடுப்பாட்டபோட்டியின் இறுதி ஆட்டம் இன்று பி.ப 2.30 மணிக்கு இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

முதலாம் சுற்றில் சுன்னாகம் ரோட்டறிக்கழகமும், மானிப்பாய் ரோட்டறிக் கழகமும் மோதவுள்ளன. (72)

இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : ஜெ.குணாளன்
முகவரி : பிரதான வீதி, சங்கானை.

இரண்டாவது அகவையில்



பெயர் : சு.மாதங்கி
முகவரி : கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

மூன்றாவது அகவையில்



பெயர் : ம.பிரசன்னா
முகவரி : கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------

முகவரி :------------

பிறந்த ஆண்டு:------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.



------------
பெற்றோர் ஒப்பம்



யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தென்மராட்சி மீனவக் குடும்பங்களுக்கு கியூடெக் நிறுவனத்தால் வழங்கப்பட்ட மீன்படி உபகரணங்களை யாழ்:ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை மற்றும் கியூடெக் நிறுவன இயக்குநர் வண.கி.யோ.ஜெயக்குமார் அடிகள் ஆகியோர் வழங்குகின்றனர். (206)

# உள்ளூராட்சி மன்றங்களுக்கு மூலதன நன்கொடை நிதியாக 22 இலட்சத்து 78000 ரூபா ஒதுக்கம்

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி மன்றங்களுக்கான மூலதன நன்கொடை நிதியாக - யாழ்.மாவட்டத்திற்கு 22 லட்சத்து 78 ஆயிரம் ரூபா கிடைத்திருப்பதாக யாழ்.பிராந்திய உள்ளூராட்சி மன்றத்தின் உதவி ஆணையாளர் கே.இராசையா தெரிவித்தார்.

கடந்த ஆண்டுக்கான ஒதுக்கீட்டின் அடிப்படையில் அமைந்து கொண்ட இந்த நிதி, நான்கு திட்டங்களை அடிப்படையாகக் கொண்டே வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு அமைவாக - யாழ். மாவட்டத்திலுள்ள சனசமூக நிலையங்களின் அபிவிருத்திக்கென 11 இலட்சத்து 76 ஆயிரத்து 600 ரூபாவும், பொது நூலகங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு 3 இலட்சத்து 39 ஆயிரத்து 340 ரூபாவும், மகப்பேறு மற்றும் சிறுபிள்ளைகள் பராமரிப்புத் தேவைகளுக்கு 4 இலட்சத்து 35 ஆயிரத்து 792 ரூபாவும், மலசலகூட பராமரிப்புக்கென 3 இலட்சத்து 26 ஆயிரத்து 35 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவை மிகவிரைவாக மக்களுக்குச் சென்றடையும் அதேவேளை, இந்த ஆண்டும் இத்தகைய சேவைகளுக்காக அதிக நிதி ஒதுக்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல உள்ளூராட்சி மன்றங்களுக்குமாக ஒதுக்கப்பட்டிருந்த நிதியானது, கூடிய விரைவில் அனுப்பப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# கலாசார அலுவலர்களுக்கு முக்கிய கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் கலாசார அலுவலர்களுக்கான முக்கிய கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெறும் இந்தக் கலந்துரையாடலில் அனைத்து பிரதேச செயலகங்களையும் சேர்ந்த கலாசார அலுவலர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் காணப்படும் புராதன இடங்கள், கலைப் பொக்கிசங்கள், வரலாற்று ஆதாரங்கள் என்பவற்றை ஆவணப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதால், கலாசார அலுவல்கள் அனைவரும் தத்தமது பிரதேசரீதியான தொல்லியல் சார்ந்த தகவல்களை இந்தக் கூட்டத்திற்கு வரும்போதுகொண்டு வரவேண்டும் என, மேலதிக அர சாங்க அதிபர் பத்தினியம்மா திலக நாயகம் போல் கேட்டுக்கொண்டுள்ளார். (ச)

## நலன்புரிச்சங்கப் பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் தெற்கு மானிப்பாய் பிரதேச ஊழியர் சங்கத்தில் புதிய நிர்வாகத் தெரிவு நாளை நண்பகல் 12 மணிக்கு பிரதேசசபையின் ரவீந்தர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்திற்கு சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு பிரதேச சபையின் செயலாளர் பி.விக்ரர் கேட்டுள்ளார். (100)

# அடிமைத்தனத்திற்கு எதிராக மக்கள் உணர்வு பூர்வமாக போராடவேண்டும்

## திரைப்பட அறிமுக விழாவில் பொன்.பூலோகசிங்கம்

அடிமைத்தனத்திற்கு எதிராக மக்கள் உணர்வுபூர்வமாகப் போராட வேண்டும். அத்தகையதொரு போராடத்திலேயே சுதந்திரத்தை வென்றெடுக்கமுடியும். ஏதுமறியாத அப்பாவிப் பொதுமக்களின்மீது, இலங்கை பொலிஸ் மேற்கொண்ட அடாவடித்தனமான தாக்குதல் சம்பவத்தை பக்கச்சார்பின்றி நடுநிலை நின்று வெளிப்படுத்தியிருக்கிறது இந்த விவரணப்படம் என, சட்டத்தரணி பொன்.பூலோகசிங்கம் தெரிவித்தார்.

வடமராட்சி தென்மேற்கு பிரதேச சபை கலாசார மண்டபத்தில் நடைபெற்ற யாருக்கு யார் காவல்? என்ற திரைப்பட அறிமுக விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் -

இந்த அரச வன்முறை இன்று நேற்று ஏற்பட்ட ஒன்றல்ல. இலங்கை சுதந்திரமடைந்த காலம் முதல் காலத்திற்குக்காலம் இடம்பெறும் நிகழ்வாகிவிட்டது. மனித உரிமைகள் தினத்தன்று நடைபெற்ற இந்தக்கொடூரத் தாண்டவத்தைத் திரைப்படமென்ற சக்திவாய்ந்த ஊடகத்தினூடு வெளி உலகிற்குத் துணிந்து தெரியப்படுத்தியுள்ளார் இயக்குநர் க.தேவதாசன்.

பாதிக்கப்பட்டோர் சார்பாக அவர் அரசிடம் நீதிகேட்டு நிற்கிறார். இவ்வாறான முயற்சிகள் வெற்றிபெறுவதற்குப் பொதுமக்களின் ஆதரவு அவசியமானதாகும். அனைத்து மக்களும் விழிப்புணர்வு பெறுவதன்மூலம், இவ்வாறான சம்பவங்கள், வருங்காலங்களில் தொடராது தடுக்கமுடியும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## சந்திப்பு களம்

காவலூர் விஜேந்திரன்

# சமுதாய நோக்கோடு நாடகப் படைப்புக்கள் உருவாகவேண்டும்

**கலைக்கு விலையில்லை, விலைக்கு கலையில்லை என்று கூறும் நாடக இயக்குநர் அப்பையா நற்குணசேகரத்தை சந்தித்தோம். நாடகத்துறை சார்பாக அவர் பல கருத்துக் களை எம்முடன் பகிர்ந்துகொண்டார்.**



எமது செவ்வியை ஆரம்பிக்கும் நோக்கில் அவரிடம் -

**உங்களது நாடகத்துறைப் பிரவேசம் பற்றிக் கூறுவீர்களா? என வினவியதற்கு-**

ஆம், எமது கல்லூரியில் 'சவப்பெட்டி' என்னும் ஆங்கில நாடகத்தில், பெண் பாத்திரத்தில் நடித்தேன். 14 வயதில் சிறந்த நடிகருக்கான விருதைப் பெற்றேன். 1953 ஆம் ஆண்டு அனுராதபுரம் கதிரேசன் கல்லூரியில் 'ஊன்று கோல்' என்னும் நாடகத்தை இயக்கினேன். அது பாடசாலை ரீதியில் பெரு வெற்றிபெற்றது.

**நாடகத்துறையில் இனம்காட்டிய படைப்புக்கள் பற்றிப் பகிர்ந்து கொள்வீர்களா?**

ஆம், நான் மூன்று மொழிகளிலும் நாடகங்களை நெறியாள்கை செய்து வருகிறேன். அவற்றிலே தாசியும் தவசியும், நால்வர், காதல்பசி, தூக்குமேடை, யாருக்காக அழுதேன், சிதறிய சிலம்புகள் (இலங்கை வானொலியில் 1969 ஆம் ஆண்டு ஒலிபரப்பாகியது. 2000 ஆம் ஆண்டு மறு ஒலிபரப்பு செய்யப்பட்டது), மனிதன். மந்திரகுமாரி, ஏன் சிரித்தான் ஏன் அழுதான் என்பன பெருவெற்றி பெற்றதுடன், பலரது பாராட்டுக்களையும் பெற்றுள்ளது.

இவற்றுடன் மாப்பிள்ளை தேவை என்ற முழுநீள நகைச்சுவை நாடகத்தை இப்போது நடித்து வருகிறேன் எனக் கூறும் இயக்குநரிடம் -

**இவற்றிலே உங்களைக் கவர்ந்த நாடகம் எதுவெனக் கூறுங்கள் எனக் கேட்டதற்கு -**

மந்திரகுமாரி, சிதைந்த உள்ளங்கள் இவை இரண்டும் என்னை மிகவும் கவர்ந்தவை. மந்திரகுமாரி நாடகத்தை கே.கே.நடராஜாவுடன் சேர்ந்து இயக்கி, நானும் நடித்தேன். 1972 ஆம் ஆண்டு



சுதுமலை மக்கள் நாடக மன்றத்தால், சிதைந்த உளளங்கள் என்ற நாடகம் தயாரிக்கப்பட்டது. இந்த நாடகம் 6 தடவைகளுக்கு மேல் மேடையேற்றப்பட்டது என பழைய நினைவுகளில் உள்ள இயக்குநரிடம் -

**சமூகத்தில் நாடகத்தின் பங்கு எவ்வாறு அமையவேண்டும் என நினைக்கின்றீர்கள்?**

நாடகத்தின்மூலம் சீர்திருத்தக் கருத்துக்களைக் கொண்டுவரலாம். ஆனால், இவை யதார்த்தமாக வெளிப்படுத்த வேண்டும். அதேநேரம், சமூகத்திற்குத் தேவையற்ற விடயங்களை இயலுமானவரை தவிர்க்க வேண்டும். இவ்வாறு தகுதியான கலைஞர்கள்மூலம் நேர்த்தியான படைப்புக்களை சமூகத்திற்கு வழங்கவேண்டும். இதனால், பார்வையாளராகிய சமூகம் - சரியான பாதையில் செயல்படும் என்பது எனது கருத்து.

**நாடகம், நாடகக் கலைஞர்கள் பற்றிப் பகிரமுடியுமா?**

ஆம், நாடகங்கள் புதிய கதைகளில் இடம்பெற்றாலும், உரையாடல்கள் பழைய பேச்சு வழக்கிலேயேயுள்ளது. இவை மாற்றப்படவேண்டும். மறைமுகமான சிலேடைத் தன்மையான நகைச்சுவைக் காட்சிகளை விட்டு, சீர்திருத்தத் தன்மையான கருத்துக்களைக் கொண்டுவரவேண்டும். இன்றைய நாடகங்கள் பார்வையாளர்களை மகிழ்விப்பதாகவே அமைகிறது.

கலைஞர்களைப் பொறுத்தவரையில் பொறுமை இல்லை. அதேநேரம், விட்டுக்கொடுத்து, சகித்துப்போகும் தன்மையும் அருகி வருகிறது. இவை மாற்றப்படவேண்டும். விமர்சனத்தை ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தை ஒவ்வொருவரும் வளர்ப்பதுடன், விமர்சனத்தை பகைமையாகப் பார்க்கக்கூடாது. கலைஞர் - பணிவு, விடாமுயற்சி, சேர்ந்து உழைத் தல் இவற்றுடன் நேரத்தைச் சரியாகக் கடைப்பிடிக்க வேண்டும். ஒழுக்கமுடையவர்களாகச் செயற்படுவதுடன், ஏனையோரை மதிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். இவைகளுடன், புரிந்துணர்வுடன் செயற்படுபவர்களாக வளரவேண்டும் என தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

**'மாப்பிள்ளை தேவை' என்ற நகைச் சுவை நாடகம் பற்றிச் சுருக்கமாகக் கூறுவீர்களா?**

ஆம், இந்த நாடகத்தின் கதை - 1972 ஆம் ஆண்டு அருமைநாயகம், ஆறுமுகநாதன் ஆகிய மூன்று பேரினதும் உரையாடல் மூலமாகவே தோன்றியது. அன்றைய காலத்தில் மாப்பிள்ளை எடுப்பதில் இருந்த தகுதிகளையும், இதனால் ஏற்படும் தாக்கங்களையும் மையமாக வைத்தே இந்த நாடகத்தைத் தயாரித்தோம். இந்த நாடகம் இற்றைவரை, 135 தடவைகள் 4 தலைமுறைக் கலைஞர்களால் மேடையேற்றப்பட்டு வருகிறது.

இதில் பொறியியலாளர், முகாமையாளர், வெளிநாட்டு மாப்பிள்ளை, நடிகன், விவசாயி, வேலையற்றவர் என்போரை - நேர்முகத் தேர்வின்மூலமாகத் தெரிவுசெய்வதும், இறுதியில் மாமனார் அடையும் அவலத்தையும் நகைச்சுவைப் பாணியில் அமைத்தோம் என இயக்குநருக்கு உரிய பக்குவத்தில் தனது நாடகத்தை விபரித்தார்.

**திரைப்படத்துறையில் அவரது பங்களிப்பு பற்றிக் கேட்டபொழுது -**

இலங்கைத் தமிழ்த் திரைப்படங்களான 'எங்களில் ஒருவன், நிர்மலா' ஆகிய படங்களில் நடித்துள்ளேன் என்றார்.

கடந்தகாலப் போர்ச்சூழலினால் சமூகத்தில் ஏற்பட்ட மாற்றம், இதனால் மக்களில் ஏற்பட்ட பிரதிபலிப்பு இவற்றை மையமாகக் கொண்டு, ஓர் திரைப்படத்தை இயக்கவுள்ளேன். இந்தத் திரைப்படத்துக்காக ஆரம்ப வேலைகள் 2004 மே மாதம் நடைபெறவுள்ளது.

எனது 50 வருடகால வாழ்வில், முதன் முறையாக திரைப்படத்தை இயக்க எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தமை பெரும் மகிழ்ச்சியான விடயம் என்றே கூறவேண்டும். இவ்வாறு பல கருத்துக்களைப் பகிர்ந்துகொண்ட இயக்குநரிடம் செவ்வியை நிறைவு செய்யும் முகமாக-

**இறுதியாக இந்தத் துறை சார்பாக நீங்கள் கூறவிரும்புவது எதுவெனக் கேட்டோம்?**

யதார்த்தமான சிந்தனை, ஒழுங்கு, கட்டுப்பாடு வளரவேண்டும். அதேநேரம், பொறாமை, தற்பெருமை, எரிச்சல் களையப்படவேண்டும். சமூகத்திற்குத் தேவையான தரமான ஆக்கங்களைப் படைக்கவேண்டும். குரு விசுவாசம், கீழ்ப்படியும் தன்மை, புரிந்துணர்வுடன் செயற்படல் கலைத்துறைக்கு மிகமுக்கியமாகும். நாடகம் சார்பான பயிற்சிகள், கருத்தமர்வுகள் இடம்பெறவேண்டும். நாடகப் போட்டிகள் நடத்தவேண்டும்.

இவ்வாறான செயற்பாடுகள் மூலமாகத் திறமையான கலைஞர்களை உருவாக்கலாம். நாடகங்கள் - பொதுவாக அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்களுக்கு அமைவாக படைக்கப்படவேண்டும். இதன்மூலம் சமூகத்துக்குத் தேவையான பல கருத்துக்களை வெளிபபடுத்தலாம். இதனால், சமூகத்தில் நாடகத்துறைக்கென தனியான இடத்தை தக்க வைத்துக்கொள்ளலாம் எனக் கூறினார்.

இவ்வாறு கலையுலகில் - நடிகராக, இயக்குநராக வலம்வரும் மாமணி நற்குண சேகரம் நுணுக்கமான, அதேநேரம் தெளிவான கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டார். நாடகத்துறை சார்பான கருத்துக்களைப் பெற்ற திருப்தியில் நன்றி கூறி செவ்வியை நிறைவு செய்தோம்.

×

## விமர்சன நோக்கு

- கந்தையா சிறிகணேசன்

# இன்றைய யதார்த்தத்தை தெளிவாக்கும் முடக்கம் நாடக ஆற்றுகை

இன்றைய மீள்குடியேற்ற காலகட்டத்தில் -மக்கள் முகம்கொடுக்கும் புதிய அவலங்கள் பல. அவற்றுள், தங்கள் சொந்த இடங்களுக்குப் போகமுடியவில்லையே என்பதும், தங்களின் வாழ்வுக்கான உறுதிப்பாடு இல்லை என்பதும் முக்கியமானவை. இதைவிட வாழ்வுக்காக பிழைக்க முற்படும்போது, எதிர்கொளளும்



இன்னொரு அவலம் மிதிவெடிகளையும் அமுக்க வெடிகளையும் சந்தித்துக் கொள்ளல் ஆகும். உதாரணமாக, சமகால ஈழத்துப் போரினால் கைவிடப்பட்ட பிரதேசங்களில் விறகு வெட்டியோ, வேறு ஏதும் தொழில் புரிந்தோ சீவிகக முற்படுவோர், நிலத்தினில் மறைந்து கிடக்கும் மிதிவெடிகளில் தங்களது அவயவங்களை இழத்தல் கொடுமையிலும் கொடுமையானது.

இந்தக் கருப்பொருட்களை மையமாகக் கொண்டு படைக்கப்பட்டதுதான், யாழ்ப்பாணம் செயல்திறன் அரங்க இயக்கம் தயாரித்தளிக்கும் 'முடக்கம்' என்னும் நாடகம் ஆகும். ஏற்கனவே 'விழிச்சுடர், நெஞ்சுறுத்தும் கானல், அக்கினிப் பெருமூச்சு' போன்ற நாடகங்கள் ஊடாக, தனது நாடகத்திறனை வெளிக்காட்டிய தே.தேவானந்த் இந்த நாடகத்திற்கான எழுத்துருவையும் எழுதி, நெறியாள்கையும் செய்துள்ளார். இது அண்மையில் வவுனியா வளாகக் கலையரங்கில் வவுனியா விழுது ஆற்றல் மேம்பாட்டு அமைப்பின் ஆதரவில் மேடையேறியது. உள்ளக அரங்கு தவிர்க்க முடியாத காரணத்தினால் கிடைக்கவில்லை. இதனால், வெளியேயுள்ள மரதத்தின்கீழ் நாடகம் மேடையேறியது. மரத்தின் இருபுறமும் ஏ வடிவில் நடிகர்கள் வந்த வண்டிகள் மறைப்புக்காய் நிறுத்தப்பட்டன. பார்வையாளர் அரை வட்டவடிவில் சுற்றியிருந்தனர். உடனடியரங்காக மேடையேற்றப்பட்டது. மத்தியில் கூரையுடன் கூடிய குறியீட்டு வீடு அமைக்கப்பட்டது. வீட்டுநிலையில் ஏணை ஒன்று தொங்கியது. வீட்டின் வெளியில் வீட்டுத்தலைவனும் நிலையின் உள்ளே அவர் மனைவியும் குந்தியிருக்க 'தன்னானானே' பாடல் ஆரம்பமானது.

மேடையின் முன்புறத்தில் இடமிருந்து வலமாக விநோத உடையும், குறியீட்டு அலங்காரமும் கொண்ட மூவர் - குதிரையில் செல்லும் லயத்திற்கு ஆடிச்சென்றனர். தொடர்ந்து மார்பில் அடித்தபடி மக்கள் கூட்டமொன்று அரங்கில் நுழைந்தது. அடுத்து குதிரையில் அரசன் செல்வதுபோலவும், அவரை வால் பிடித்து செலவோருமாக ஒரு காட்சியமைக்கப்பட்டது. இந்த அறிமுகக் காட்சியோடு நாடகம் ஆரம்பித்தது.

இடம் பெயர்ந்து வாழும் குடும்பஸ்தத்ன் பிழைப்புக்காக போர் நடந்த பூமியில் விறகு வெட்டச் செல்கிறான். விறகு வெட்டும்போது, மிதிவெடி வெடித்து காலை இழக்கிறான் இந்தக் காட்சியில் நடிப்பு தத்ரூபமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது. அயலவர் உதவியுடன் வைத்தியசாலை சென்று, ஊன்றுகோலுடன் 47 நாட்களின் பின் வீடு வந்தவனின் கனவிலும் மிதிவெடிப் பயங்கரம் இழையோடுகிறது. ஆம் நித்திரையில் 'என்ர காலை வெட்டாதேங்கோ' என்று அவன் கத்துவது பார்வையாளரின் துயரைக் கூட்டுகிறது. பின்னணியில் பாடப்பட்ட பாடல் - அதனை மேலும் கூட்டுகின்றது.

**'வானும் கனல் சொரியும்**
**மண்ணும் கனல் எழுப்பும்'**

செயற்கைக் காலோடு பயிற்சி பெறுகிறான். தனித்துப் பிழைத்து குடும்பத்தை வாழவைக்கவேண்டுமென எண்ணுகிறான். மனைவயோ வலிப்பு வியாதிக்காரி காதலித்து மணமுடித்தமையால் மனைவியின் தாயும் சகோதரர்களும் மேலும் உதவிசெய்ய மறுத்தனர். உழவு வண்டியில் மண்ணடித்து கூலி செய்து பிழைக்க முற்பட்டான். ஆனால் சமூகம் 'சொத்திக்காலோட என்ன செய்வாய்' என்றது. மண் ஏற்றச் சென்ற அந்த வண்டியும் அமுக்க வெடியில் சிக்கியமை யதார்த்த நிலமையை மேலும் உணர்த்தியது. இந்நிலையில் 'சொந்த இடத்திற்கு விடுகிறாங்களில்லை' என்ற கோபம் மக்களிடையே அதிகரிக்கிறது. தனி வீட்டு நிலைமை சமூகத்தளத்தில் உசுப்பப்படுகிறது.

இந்த மக்களின் இடம்பெயர்ந்த அவலத்தை, விநோத உடையுடன் ஆடும் கலைஞரின் ஆட்டமும், பாடலும் நிலமையை உணர்வுபூர்பமாக சித்தரித்தது.

'நையினார் செத்தது நல்லது, நல்லது' என்ற கிராமியப் பாடலுக்கு ஆடிவரும் அரச மறறும் அரசசார்பற்ற அலுவலர்கள் மக்களிடம் 'என்ன பிரச்சினை' என வெகுளித்தனமாய் கேட்கின்றனர். 'மிதிவெடிகளைக் கண்டுபிடித்துச் சொல்லுங்கோ, நாங்கள் அலசி ஆராய்ந்து திட்டம்போட்டுச் செயல்படுத்துகிறோம்' என்கின்றனர். நீங்கள் 'ஒண்டுக்கும் யோசியாதையுங்கோ' என்ற அலுவலரின் வார்த்தையை 'ஒண்டுக்கு போகவும் பயமாக இருக்கு' என்ற மக்களின் வரிகள் சம்மட்டியால் தாக்குகின்றன.

விளக்குமாறு செய்து பிழைக்கின்றான் அம்மனிதன் மனதில் 'உறுதி கொண்ட இவன் மனிதன் இவன் எந்த ஊரான்' என நாடக ஆசிரியர் நம்பிக்கை தருகிறார்.

நாடகம் இன்னுமொரு காட்சித்துண்டுக்கு நகர்ந்திருந்தது. தாலாட்டுப் பாடலின் பின்னணியில் மனைவி வீட்டில் வலிப்பு வந்து, மயங்கிக் கிடக்கின்றாள். ஒரேயொரு விளக்குமாறு வித்த காசில் பாண் வாங்கி வருகின்றான் கணவன். தங்கள் தலைவிதியை நொந்துகொள்கிறார்கள். ஆனந்தமாய் இருந்த பழைய காலத்தை இரைமீட்கின்றார்கள்.

'எவடம், எவடம் - புளியடி புளியடி' என்ற சிறுவர் விளையாட்டுப்பாடல் இக்காட்சிக்குத் துணை செய்கிறது. 'இப்ப புளியடியெல்லாம் மிதிவெடிகள்' என கனவு கலைகின்றது. அரிசி வாங்கப் பணம் இல்லையே உலை வைத்துக் கனநாள் என்ற மனைவியின் கேள்விக்கு எங்களுக்கு உலைவைக்க எல்லாரும் இருக்கினம் எனச் சீறுகிறான் கணவன்.

காட்சி அரசியல்வாதிகளின் வருகையோடு வேகம் பெறுகிறது. 'அலுவல் பார்த்து வந்திருக்கிறோம், ஓடிவாங்கோ' என்று மக்களை அழைக்கின்றனர். பெரிய மனிதரின் வருகை பற்றி ஒரு மாதத்திற்கு முன்பு பக்ஸ் அனுப்பி விட்டதாகக் கதை விடுகின்றான் இடைத்தரகன். 'எடுங்கோ மாலையை, ஐயா மணி ஐயாவிற்குப் போடுவம்' என்று கூறவும் - குதிரையில்வரும் கழைக் கூத்தாடிபோல் வருகிறார் அரசியல்வாதி. மக்கள் மாரடிக்கின்றார்கள் 'எங்களை வீட்டை விடுங்கோ' என்று கேட்கின்றார்கள். 'கிடைப்பதைப்பெற்று தலையை ஆட்டுங்கோ' என்கிறார்கள் அரசியல்வாதிகள். 'நாங்கள் கிள்ளித்தந்ததைப் பெற்றுக்கொள்ளுங்கவேண்டும்

உரிமை வேண்டும், உணர்வு வேண்டும், உயர்வு வேண்டும் நாங்கள் மனிதர் நாங்கள் மனிதர்' இரு கட்டங்களாகப் பிரித்துப் பார்க்கக் கூடிய கட்டமைப்புடன் நாடகம் நகர்த்தப்பட்டுள்ளது. ஒன்று மக்கள் அவலம், மற்றையது ஏமாற்றும் அரசியற்சூழல். இரண்டையும் கோடி காட்ட கிராமியப் பாடல்கள் பண்புகள் மொழி நடையில் பெரிதும் தங்கியுள்ளார் நாடகாசிரியர்.

ஒரு தெருவெளி நாடகமாக வட-கிழக்கு எங்கணும் மேடையேற்ற வேண்டிய நாடகம் இது. இது கூறும் அரசியலும் ஊடுபாவாக தமிழர் தேசிய - சுயநிர்ணய அரசியலைக் கூறி நிற்கின்றமை இவ்வரங்கின் வெற்றிக்கு காலாகின்றது. இன்று மாலை 4 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இந்த நாடகம் இலவசமாக காண்பிக்கப்படவுள்ளது குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*தனக்கு உவமைஇல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்*
*மனக்கவலை மாற்றல் அரிது.*

-திருக்குறள்.

## நமது நோக்கு

### மதம் மீண்டும் வதம் செய்ய வருகிறது!

மதவெறியுடன் கூடிய இன வெறியால் சீரழிந்து போயுள்ள சிறிலங்காவில், இரு தசாப்த கால கொடூர யுத்தமொன்றின் பின்னர் தற்காலிகமாக ஓர் உடன்பாட்டின் அடிப்படையில் நிலவுகின்ற, இரண்டாண்டு கால அமைதிச்சூழல் காரணமாக, சமாதான சக வாழ்வினை மக்கள் அச்சத்தின் மத்தியில் அனுபவித்து வருகின்றார்கள் என்பதை அனைவரும் அறிவர்.

பேரினவாத சிந்தனைக்குள் மூழ்கி அதிகார வெறியில் தத்தமக்குள் முரண்பட்டு மோதிவரும் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் பிரதான அரசியல் தலைமைகள், இந்த இடைக் கால அமைதி நிலையைக் குழப்பி அதன்மூலம் அரசியல் ஆதாயம் தேடும் குரூர இலக்குடன் தமது நகர்வுகளை முனைப்புடன் மேற்கொண்டுவரும் நேரம் இதுவாகும். சக மனிதரை இன-ஜாதி -மொழி மற்றும் மத அடிப்படையில் பேதம் காட்டிப் பிரித்து அதன் மூலம் ஏற்படும் குழப்பங்களையும், மோதல்களையும் அரசியல் அனுகூலங்களைப் பெற்றுக்கொள்ளும் சாதனங்களாகப் பயன்படுத்தி வரும் சிங்கள அரசின் பிரதான சக்திகள் சிறிலங்காவை முற்றாக சிதைத்தழிக்கும் குறுகிய மனோபாவம் கொண்டவர்கள் என்பதில் இருவேறு கருத்துக்கள் கிடையாது.

காலம் காலமாக இவர்கள் வேண்டும் என்றே திட்டமிட்டுச் செய்த வரலாற்றுக் குற்றங்கள் தான் சிறிலங்காவின் இன்றைய அவலங்களுக்கெல்லாம் ஒரே காரணமாகும்

ஆரம்பத்தில் சிங்களவன், தமிழன் என்ற இனரீதியிலான பிரிவினையை ஏற்படுத்தி, அதன் மூலம் அரசியல் சூதினை ஆடமுயன்ற சிங்களத் தலைவர்களின் தவறான வழிநடத்தல்கள் பாமரச் சிங்கள மக்களிடையே தமிழ்மக்களுக்கு எதிரான வெறியுணர்வை ஒரு பேரலையாகவே ஏற்படுத்தி அதன் மூலம் தோற்றுவிக்கப்பட்ட இனக் கலவரத்தீயில் அத்தலைவர்களை குளிர்காயவைத்தது.

ஆரம்பத்தில் சாதாரணமான இனவேறுபாடாகத் தொடங்கிய முரண்பாடுகள் 1956 இல் பண்டாரநாயக்க ஆட்சிக்கு தனிச் சிங்களச் சட்டத்தை 24 மணி நேரத்தில் பிரகடனம் செய்வதாகக் கூறிக்கொண்டு பௌத்த பீடங்களின் ஆசீர்வாதத்துடன் ஆட்சி பீடம் ஏறியதும் மாற்றவே முடியாத பேரழிவை ஏற்படுத்தும் இனவாதமாக உருவெடுத்தபோது பண்டார நாயக்க மட்டுமல்ல, அதற்குப் பின்னர் ஆட்சிபீடமேறிய சிங்களத் தலைமைகள் எவராலுமே கட்டுப்படுத்தவோ, கைவிடவோ முடியாத அரசியல்கோட்பாடாகவும், நடவடிக்கையாகவும் மாறி விட இன முரண்பாடு ஒரு பெரும் யுத்தத்திற்கே வழிவகுப்பதாக அமைந துபோயிற்று.

அந்த யுத்தத்தின் விளைவுகள், அவலங்கள், தாக்கங்கள் அனைத்தும் இன்னும் தொடர்வதாகவே உள்ளது.

இனமுரண்பாட்டை மதவெறியுடன் கூடிய அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தும் சிங்களப் பேரினவாதிகளின் பின்னால் 'தம்மபதத்தை' பின்பற்றும் பௌத்த பிக்குகளுக்கும் அணி திரண்டு நீதிக்கும் தர்மத்திற்கும் விரோதமாக, பௌத்த கோட்பாடுகளுக்கும் முரணாகச் செயற்படுவதுதான் சிறிலங்காவின் நிரந்தர அமைதியின்மைக்கு காரணமாயிற்று.

இனவெறி, மதவெறி இரண்டும் பௌத்த சிங்களப் பேரினவாதிகளின் ஆழ்மனதிலிருந்து இத்தனை அவலநிகழ்வுகளுக்கும், அழிவுகளுக்கும் பின்னர் அப்படியே இன்னமும், தொடர்வதுதான் அமைதி குறித்த நம்பிக்கைகளை சாத்தியமற்றதாக்கி வருகிறது.

இனமோதலில் திருப்திபெறாத பேரினவாதம், அந்தமோதல் யுத்தமாக வெடித்தபோது எதிர்கொள்ள நேர்ந்த வரலாற்றுத் தோல்விகளில் இருந்து பாடங்களைப் படித்துக்கொண்டதாக இல்லை.

இப்போது மீண்டும் மதவாதத்தை தீவிரமாக்கி மதரீதியிலான முரண்பாடுகளை பெரிதாக்கி மதக்கலவரங்களை உருவாக்குவதன் மூலம் மற்றொரு பேரழிவுக்கான களத்தை உருவாக்க முயல்கின்றன. அண்மையில் மொஸ்கோவில் இறந்த பௌத்தமத தேரர் ஒருவரின் இறுதிக்கிரியைகளின்போது கிறிஸ்தவ மக்களுக்கெதிரான கலவரம் ஒன்றை உருவாக்க சில மக்கள் விரோத சிங்கள பௌத்த அரசியல் அநாமதேய சக்திகள் முயன்றமை தெரிந்த விடயமே.

ஒருகாலத்தில்; ஏன் போர் நிகழ்ந்து கொண்டிருந்த அண்மைக்காலம் வரை இந்துக்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் எனப் பல மதங்களையும் சார்ந்த தமிழ்மக்களை கண்மூடித்தனமாக இராணுவநடவடிக்கைகளால் அழித்தும், விமானப் படைத்தாக்குதலால் அவர்களது மதவழிபாட்டு மையங்களை நிர்மூலமாக்கியும் வதம் செய்து மகிழ்வு கொண்ட பௌத்த சிங்கள வெறியர்கள் இப்போது கிறிஸ்தவமதத்தை இலக்கு வைத்து தாக்குதல்களை தொடுக்க ஆரம்பித்துள்ளனர்.

ஒரே மாதத்தில் 45 தேவாலயங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இவை வெறும் மதவெறிக் கும்பல்களால் மேற்கொள்ளப் பட்டவையல்ல. இதற்கு வலுவான அரசியல் பின்னணியும் உண்டு.

அரசாங்கம் அடுத்த இரு வாரங்களுக்குள் மதமாற்றத் தடைச்சட்ட மூலத்தை நாடாளுமன்றில் கொண்டுவரவேண்டும் என வலியுறுத்தியுள்ள கலாநிதி சோபிததேரர் என்ற பிக்கு அப்படிச்செய்யாவிடில் சாகும்வரை உண்ணாவிரதம் ஒன்றையும் நாடுதழுவிய அரசியல் ரீதியிலான ஆர்ப்பாட்டத்தை நடத்தப் போவதாக மிரட்டியுள்ளார்.

இதுஆரோக்கியமான ஒன்றல்ல....மிக மிக ஆபத்தான ஒன்றேயாகும். மதம் அவரவர் மனதைப் பொறுத்தவிடயம்.

எந்த மதத்தை பின்பற்றுவது என்பதை அவரே தேர்ந்தெடுக்கும் ஜனநாயக உரிமை அவருக்கேயுண்டு.

சட்டத்தைப் பயன்படுத்தி இதைத் தடைசெய்வது அபத்தமான விடயமே....மதம் மீண்டும் வதம் செய்ய வருவதை அமைதியையும், சமாதானத்தையும் விரும்பும் எவரும் விரும்பவே மாட்டார்கள். அவற்றை அனுமதிக்கவும் கூடாது.

## நாடும் நடப்பும்




செய்தி : குடாநாட்டில் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகள் தடைப்படும் அபாயம்!!
வெளிநாட்டு அமைப்புக்களின் செயற்பாடுகளில் மாற்றம்!!

## ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் ஏ 9 நெடுஞ்சாலை புனரமைக்கப்படவுள்ளது

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் ஏ-9 நெடுஞ்சாலையின் - மிருசுவிலில் இருந்து யாழ். நகர்வரையான முப்பது கிலோமீற்றர் நீளமான வீதிப்பகுதி புனரமைக்கப்படவுள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனர்வாழ்வுத் திட்டமெனும் செயற்திட்டத்தின் கீழேயே இந்த வீதி புனரமைக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் மற்றொரு வீதியாக யாழ். பண்ணை வீதியும் புனரமைக்கப்படவுள்ளது. கடலை ஊடறுத்து அமைந்துள்ள வீதிப்பகுதியே உடனடியாகப் புனரமைக்கப்படவுள்ளது எனத் தெரிவித்த வீதி அபிவிருத்தி அதிகாரசபை வட்டாரங்கள், இந்த வீதியானது அகலமாக்கப்படவுள்ளதாகவும் தெரிவித்தன.

இந்த வீதிப் பகுதியிலேயே வாகனமொன்றைக் கடக்க முற்பட்டபோது மினிபஸ் ஒன்று கடலுக்குள் குடைசாய்ந்து வீழ்ந்து, ஒருவர் பலியானமை தெரிந்த விடயம். அகலம் குறைவாக இருப்பதன் காரணமாகவே வீதி விபத்துக்கள் ஏற்படுவதாகவும், எனவே, வீதியை அகலமாக்க வேண்டியது அவசியமாகவுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியின், யாழ். நகரில் இருந்து வல்லைவெளி வரையான பகுதியும், புனரமைப்புச் செய்யப்படவேண்டியுள்ளது. அத்தோடு பொன்னாலைச் சந்தியிலிருந்து காரைநகர் நோக்கி கடலை ஊடறுத்துச் செல்லும் பாதையும் புனரமைக்கவேண்டியுள்ளது. இவ்விரு வீதித் திட்டங்களையும் சர்வதேச நிதி உதவியுடன் புனரமைப்புச் செய்யும் நோக்கில் வீதி அபிவிருத்தி அதிகார சபையால் முன்மொழியப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த வேலைத் திட்டங்களுக்கு பல மில்லியன் ரூபா நிதி தேவைப்படுமெனவும், அதனை ஆசிய அபிவிருத்தி வங்கி அல்லது ஏதாவது சர்வதேச நாடுகள் மூலமே தந்துதவ முடியுமெனவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினர் தெரிவித்துள்ளனர். (ச)

## விருப்பு அடிப்படையில் ஓய்வூதியம்; சுற்றுநிருபம் அனுப்பிவைக்கப்படும்

### அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவிப்பு

அரச ஊழியர்கள் விருப்பு அடிப்படையில் ஓய்வுபெறும் திட்டம் தொடர்பாகச் சுற்றறிக்கை, அரச திணைக்களங்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது என பொது நிர்வாக அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

ஓய்வுபெற இருப்பவர்களின் தகைமைகள், வயதெல்லை என்பன தொடர்பாக இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

அரசஊழியர்களை மேலதிகமாகக் கொண்டிருக்கும் அரச செயலகங்களில் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. ஆசிரியர் மற்றும் சுகாதார சேவையாளருக்கு இந்தத் திட்டம் பொருந்தமாட்டாது.

தாதியர் சேவையைப் பொறுத்தவரை பல வெற்றிடங்கள் உள்ளன. ஓய்வுபெற்ற தாதியர் மீண்டும் சேவையில் அமர்த்தப்படுகின்றனர்.

விருப்பு அடிப்படையிலான ஓய்வூதியத் திட்டம் அரச சேவையைப் பலவீனப்படுத்துவதற்கு அல்ல, அதனை வலுப்படுத்துவதற்காகவே அமுல்செய்யப்படுகின்றது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## தொலைக்கல்வி உத்தியோகத்தருக்கான வகுப்புக்கள் எதிர்வரும் 13 ஆம் திகதி

வலிகாமம் பிரிவு - தொலைக்கல்வி நிலையத்தில் கல்விபயிலும் உத்தியோகத்தர்களுக்கான வகுப்பொன்று, எதிர்வரும் 13 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபரின் அலவலகத்தில் காலை 10 மணியளவில் நடைபெறவுள்ள இந்த வகுப்பிற்கு, வலிகாமம் பிரிவு தொலைக்கல்வி நிலையத்தில் பயிலும் அனைத்து பதவிநிலை உத்தியோகத்தர்களும் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இந்தத் தொலைக்கல்வி நிலையமானது நான்கு பிரதேசங்களில் அமைக்கப்பட்டு, பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு வேண்டிய பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. வலிகாமம் பிரிவுக்கு மேலதிக அரச அதிபர் ப.திலகநாயகம்போலும், யாழ்ப்பாணப் பிரிவிற்கு பிரதேச செயலர் கலாநிதி க.குணராசாவும், தென்மராட்சிப் பிரிவிற்கு பிரதேச செயலர் எஸ்.சிறிநிவாசனும், வடமராட்சி பிரிவிற்கு பிரதேச செயலர் ஆ.சிவசுவாமியும் பொறுப்பாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தமிழ், சிங்கள மக்கள் இணைந்து சமாதானத்திற்கு விரோதமான சக்திகளை எதிர்க்கும் அடித்தளமொன்றை உருவாக்கிக்கொள்ளவேண்டும்

### நிறுவனங்களின் குழுத் தலைவர் வீரரட்ண

தமிழ் மக்களும் சிங்கள மக்களும் இணைந்து, சமாதானத்திற்கு எதிராகச் செயற்படும் அரசியல்வாதிகளுக்கு எதிராகப் போராடும் அடித்தளமொன்றை இடவேண்டும் என, மொனறாகலையில் இருந்து சமாதான சுற்றுப்பயணத்தை மேற்கொண்ட நிறுவனங்களின் குழுத்தலைவர் கே.ஜி.கே.வீரரட்ண தெரிவித்தார்.

அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்த இந்தக் குழுவில் - எண்பதிற்கும் மேற்பட்டவர்கள் அடங்கியிருந்தனர். மொனறாகலையில் உள்ள அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் கிராமமட்ட நிறுவனங்களின் பிரதிநிதிகளே இந்தக் குழுவில் முக்கிய அங்கம் வகித்திருந்தனர்.

இந்தக் குழுவினர் - கடந்தவாரம் யாழ். வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் சமாதானம் தொடர்பான கருத்தரங்கொன்றை நடத்தியிருந்தனர். இந்தக் கருத்தரங்கின்போதே இந்தக் குழுவின் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் - நாடு இன்றுள்ள நிலையில் சமாதானமே எல்லோருக்கும் தேவையாகவுள்ளது. நீடித்த சமாதானத்திற்காக இன, மத பேதமின்றித் தமிழர்கள் சிங்களவர்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

சமாதானத்திற்கு எதிரான அரசியல்வாதிகளுக்கு எதிராகப் போராடக்கூடிய அடித்தளமொன்றை, இனங்களின் நல்லுறவு மூலம் ஏற்படுத்தவேண்டும். அதற்கு இவ்வாறான சமாதான சுற்றுப் பயணங்கள் பெரும் உதவியாகவிருக்கும் எனத் தெரிவித்தார்.

இந்தக் கருத்தரங்கு நிகழ்வில் - யாழ். மாவட்ட மனித நேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன், அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைய உப தலைவர் வி.சிறிசத்திவேல் ஆகியோர் கலந்துகொண்டு உரையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தெற்குத்திசையிலிருந்து...

- இந்திரஜித் -

# அமைச்சுக்களை பறித்துக்கொண்டு சிக்கலில் சிக்கியுள்ள சந்திரிகா!

2004 ஆம் ஆண்டு மலர்ந்துள்ள நிலையில், இலங்கையில் அரசியல் முறுகல்நிலை இன்னமும் தொடர்கிறது. ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையிலான அதிகாரப்போட்டிக்குத் தீர்வு காணப்படாது போய்விடுமோ என்ற அச்சம் எழுந்துள்ளது. இதன்காரணமாக, இனப்பிரச்சினைக்கான தீர்வு முன்னெடுப்புகள் தொடர்ந்தும் ஸ்தம்பித்து நிற்கும் நிலைமை உருவாகியுள்ளது.

ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களைப் பொறுப்பேற்றமை, அதன் பின்னர் உருவாகியுள்ள அரசியல் நிலைகள் யாவும் களையப்படவேண்டுமானால், நேர்மையும், நம்பிக்கை





யும் அவசியமாகும்.

ஆனால், அந்த நேர்மையும், நம்பிக்கையும் இன்று தென்னிலங்கை அரசியலில் தேடிப் பிடிக்கவேண்டிய அவசியத்தை உண்டாக்கியுள்ளன.

ஜனாதிபதி - என்ன காரணத்தைக்கூறி பாதுகாப்பு, உள்துறை மற்றும் ஊடகத்துறை அமைச்சுக்களைப் பொறுப்பேற்றாரோ, அந்த பொறுப்புக்களை இதுவரை அவரால் திருப்திகரமாகச் செய்யமுடியவில்லை.

மறுபுறுத்தில், அவரால் அந்தப் பொறுப்புக்களைச் செய்து முடிப்பதற்கு அனைத்துத் தரப்பினதும் ஒத்துழைப்புகளும் இதுவரை சரியாகக் கிடைக்கவில்லை.

திருகோணமலை - குரங்குப்பாஞ்சானிலுள்ள விடுதலைப் புலிகளின் முகாம் திருகோணமலை துறைமுக்த்துக்குப் பாதுகாப்பு அச்சுறுத்தலை விடுத்துள்ளது. எனவே, அந்த முகாமை அகற்றிவிடவேண்டும் என்ற முயற்சியின் மத்தியிலேயே, ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

உள்துறை அமைச்சு - பொலிஸாருக்கு அமைச்சு என்பதால், அந்த அமைச்சு - நாட்டில் குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டது. எனவே, அதனைத் தமது பொறுப்பில் ஏற்றுக்கொள்வதாக ஜனாதிபதி அறிவித்தார்.

உள்துறை அமைச்சைத் தமது நடவடிக்கைகளுக்கான தற்பாதுகாப்புக்காக ஜனாதிபதி பொறுப்பேற்றார். ஆனால், இதுவரை குறிப்பிடத்தக்கவகையில் எதுவுமே நடக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ் சுமத்தியது.

குரங்குப்பாஞ்சான் முகாமை அகற்றப் போவதாகக் கூறி, பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்ற ஜனாதிபதி - தமிழீழ விடுதலைப் புலிகளின் வேண்டுகோளுக்கு இணங்க, இரண்டு இராணுவ முகாம்களை அகற்றியுள்ளதாக அமைச்சர் ராஜித சேனரட்ன சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, ஜனாதிபதி - பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றமையானது, ஒரு அரசியல் இலாபநோக்கு நடவடிக்கையே அன்றி, நாட்டைக் காக்கும் நடவடிக்கை அல்ல என அவர் கூறினார்.

உள்துறை அமைச்சைப் பொறுப்பேற்ற பின்னர், மேல்மாகாணத்தில் மாத்திரம் - நாட்டின் 45 வீத குற்றச்செயல்கள் இடம்பெறுவதாக அவர் கூறுகிறார். ஊடகத்துறையிலும், பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்களே, முக்கிய அரச ஊடகங்களுக்கு அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இதுவும் அரசியல் இலாபம் கருதிய நகர்வே என்ற குற்றச்சாட்டும் ஜனாதிபதியின்மீது சுமத்தப்பட்டுள்ளது. ஆனால், ஜனாதிபதியோ எதையுமே பொருட்படுத்தாமல், தமது நிறைவேற்று அதிகார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்கிறார்.

படையினரைக் காட்டிலும், பொலிஸ் உயர் அதிகாரிகளை அவர் அடிக்கடி சந்தித்து, ஆலோசனை வழங்கி வருகிறார். போர்நிறுத்த உடன்பாடு அமுலில் இருப்பதால், ஜனாதிபதிக்கு இராணுவத்தினர் விடயத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டிய அவசியம் இருக்கவில்லை.

ஆனால், தற்சமயம் தென்னிலங்கையில் இடம்பெற்றுவரும் குற்றச்செயல்கள் தொடர்பில், ஜனாதிபதிக்கு அதிக கவனம் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

பொலிஸ்துறை - முன்னாள் அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் வசம் இருந்தபோது, இடம்பெற்ற குற்றச்செயல்கள் சம்பந்தமாக, ஜனாதிபதி நாள்தோறும் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி வந்தார். ஆனால், தற்சமயம் அதே குற்றச்சாட்டுக்கள் அவர்மீது சுமத்தப்படுகின்றன. அதிலும் அமைச்சர் ஜோன் அமரதுங்க- ஜனாதிபதியின்மீது குற்றம் சுமத்தியுள்ளார்.

தற்சமயம் தென்னிலங்கையில், கிறிஸ்தவ அடிப்படைவாதிகளுக்கு எதிராகப் பௌத்த அடிப்படைவாதிகள் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளனர்.

கங்கொடவில சோமதேரர் மரணமடைந்ததையடுத்து, கிறிஸ்தவ அடிப்படைவாதிகளுக்கு எதிராக, பௌத்தர்கள் மத்தியில் தீவிர பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சோமதேரர் - பௌத்த மக்கள் மாற்று மதங்களுக்குச் சென்று சேருவதை, தீவிரமாக எதிர்த்து வந்தமையால், ரஷ்யாவில் அவருக்கு கலாநிதிப் பட்டம் வழங்கப் போவதாக அழைத்து, அங்கு மரணம் சம்பவிக்கச் செய்யப்பட்டதாகவே பௌத்த பிக்குகள் கூறுகின்றனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் எந்தளவு உண்மையைக் கொண்டுள்ளன என்பது தெரியாத போதும், பிரேத பரிசோதனையில், தேரரின் மரணம் இயற்கையானது எனத் தெரியவந்தது. எனினும், தேரரின் உடற்பாகங்கள் சில இரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

அதன் விபரங்கள் கிடைக்கவில்லை. முதலில் பிரேத பரிசோதனை மேற்கொள்ளப்பட்டபோது, அதில் வெளியான தகவல் - பௌத்த அடிப்படைவாதிகளுக்கு, அவர்களின் பிரசாரத்துக்குத் தோல்வியைத் தந்தது.

ஆனால், தேரரின் உடற்பாகங்கள் சில இரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்ற விடயம், பௌத்த அடிப்படைவாதிகளின் பிரசாரத்துக்கு குறிப்பிட்ட காலத்துக்கு மேலும் உரமூட்டியுள்ளது. சரி, இதில் ஜனாதிபதி பொறுப்பேற்றுள்ள உள்துறை அமைச்சின்மீது மீது ஏன் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளது எனப் பார்ப்போம்.

சோமதேரரின் பூதவுடல் இலங்கைக்குக் கொண்டுவரப்பட்ட பின்னர், ஜனாதிபதி பொலிஸ் அதிகாரிகளை அழைத்து கட்டளை ஒன்றைப் பிறப்பித்திருந்தார். சோமதேரரின் மரணத்தை அடுத்து கிறிஸ்தவ தேவாலயங்கள் மீது தாக்குதல்களை நடத்துவதற்குச் சிலர் முயற்சிக்கிறார்கள். இதனைத் தடுக்க வேண்டும். இலங்கையில் மதச் சுதந்திரம் ஏனைய நாடுகளை காட்டிலும் அதிகமான நிலையில் இருப்பதால், இங்கு மதக் கலவரங்கள் ஏற்படுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது என ஜனாதிபதி குறிப்பிட்டிருக்கிறார். ஆனால், ஜனாதிபதி தமது கட்டளையில், சோமதேரரின் பூதவுடல் தகனம் செய்யப்படும்வரை எந்தவொரு கிறிஸ்தவ ஆலயங்களும் தாக்கப்படுவதற்கு அனுமதிக்க முடியாது எனக் கூறியிருந்தார்.

ஜனாதிபதியின் இந்தக் கட்டளையை, பௌத்த அடிப்படைவாதிகள் சரியாகப் பயன்படுத்திக்கொண்டார்கள் என்றே கூற வேண்டும். ஏனெனில், சோமதேரின் பூதவுடல் தகனம் செய்யப்படும்வரை, பௌத்த அடிப்படைவாதிகள் கிறிஸ்தவ ஆலயங்கள் மீது தாக்குதல்கள் எதனையும் நடத்தவில்லை.

ஆனால், சோமதேரரின் பூதவுடல் தகனம் செய்யப்பட்ட நாளின் பின்னர், பல கிறிஸ்தவ ஆலயங்கள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. கிறிஸ்தவ அடிப்படைவாதம் என்ற சொல் பௌத்த அடிப்படைவாதிகளால் சொல்லப்பட்டபோதும், அதன் சரியான விளக்கம் சாதாரண பௌத்த மக்களிடம் இருக்கவில்லை. எனவே, அவர்கள் கத்தோலிக்க மதத் தலங்களையும் தாக்கியுள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் பொலிஸ்துறையை ஏற்றுள்ள ஜனாதிபதிக்கு தலையிடியை ஏற்படுத்தியுள்ளன. முன்னர் குற்றச்செயல்கள் தொடர்பில், ஜனாதிபதி - அமைச்சர் ஜோன் அமரதுங்கவை குற்றம் சுமத்தியதுபோல, இப்போது ஜனாதிபதியின்மீது கிறிஸ்தவ மதத்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளார்.

பொலிஸ்துறையை ஏற்றுள்ள ஜனாதிபதி உரியமுறையில் கிறஸ்தவ ஆலயங்களை பாதுகாக்கத் தவறிவிட்டார் என அவர் கூறியுள்ளார். இந்தப் பரஸ்பரக் குற்றச்சாட்டுக்களிலிருந்து ஒன்றை மட்டும் எம்மால் புரிந்துகொள்ளமுடியும்.

இரண்டு தரப்புமே தமது அரசியல் இலாபங்களை மையமாகக் கொண்டே செயற்படுகின்றனர் என்பதே அந்த உண்மையாகும். நாட்டில் இன்று நிலவும் அரசியல் முறுகல்களுக்கு மத்தியிலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும், மக்கள் விடுதலை முன்னணியினரினதும் கூட்டு ஒப்பந்தம் தள்ளாடிக்கொண்டிருக்கிறது.

மக்கள் விடுதலை முன்னணி - சிறி லங்கா சுதந்திரக்கட்சியை பயன்படுத்தி, மூன்றிலொரு அரசியல் சக்திகள் தாம் என்பதை உறுதிப்



படுத்திக்கொள்ள முயற்சிக்கிறது. எனினும், இதனை ஜனாதிபதி உட்பட பெரும்பாலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் விரும்பவில்லை.

குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்த கூட்டை வன்மையாக எதிர்க்கின்றனர்.

மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டுச் சேர்வதால், சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் வளர்ச்சிக்கும், இறைமைக்கும் பாரிய பாதிப்பு ஏற்பட்டு விடும் என இந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருதுகின்றனர்.

அதனைவிட முக்கியமாக, பின்வரிசையில் உள்ள நாம், முன்வரிசைக்குவர முயற்சித்துக்கொண்டிருக்கும் வேளையில், மக்கள் விடுதலை முன்னணியினரின் கூட்டு, தம்மை தொடர்ந்தும் பின்வரிசையிலேயே இருக்க வைத்துவிடும் என்பதே, மக்கள் விடுதலை முன்னணியுடனான கூட்டை எதிர்த்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணமாகும்.

அதனைவிட வேறு சில காரணங்களும் இந்த மக்கள் விடுதலை முன்னணியினருடனான கூட்டை எதிர்க்கும், வரிசையில் முன்னின்று செயற்படும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான பாரத லக்ஷ்மன் பிரேமசந்திராவைப் பொறுத்தவரையில், பொதுஜன ஐக்கிய முன்னணிக் கட்சியில், பிரதி அமைச்சர் பதவி தமக்கு தேவையென ஜனாதிபதியிடம் நேரடியாக கூறியும், அந்த வாய்ப்பை பெற்றுக்கொள்ள முடியாதவராவார்.

மற்றுமொரு கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சந்தன கத்திரியாராச்சி - தனிப்பட்ட வழக்கு ஒன்றில் ஐக்கிய தேசிய கட்சியின் அமைச்சர் ஒருவருக்கு நஷ்டஈட்டைச் செலுத்தவேண்டிய நிலையில் உள்ளார்.

எனவே, அவருக்கு மக்கள் விடுதலை முன்னணியுடனான கூட்டமைப்பை எதிர்ப்பதன்மூலம், ஐக்கிய தேசியக் கட்சியின் நன்மதிப்பை பெறவேண்டியநிலை ஏற்பட்டுள்ளதாகவும், அதன்மூலம் நமக்கு எதிரான வழக்கை சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள முடியும் எனவும் அவர் நினைப்பதாக - மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டை வகிக்கும் சிறிலங்கா சுதந்தரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கருதுகின்றனர்.

எது எப்படியோ மக்கள் விடுதலை முன்னணியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் எதிர்வரும் 21 ஆம் திகதி இனப்பிரச்சினை தீர்வை நோக்கிய கூட்டமைப்பைத் தவிர்த்து, ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்வரும் தேர்தலில் தோற்கடிக்கும் வகையிலான கூட்டைச் செய்துகொள்ள இருப்பதாகக் கூறப்படுகிறது. இது சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் அதன் தலைவியுமான ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் தற்சமயம் அவசியமானதாகவே காணப்படுகிறது.

ஏனெனில், அமைச்சுக்கள் மூன்றைப் பொறுப்பேற்று, அதன்மூலம் ஐக்கிய தேசியக் கட்சியைப் பணியவைத்து, அதனுள் இணக்கமுள்ள அரசாங்கத்தை ஏற்படுத்திக் கொள்ள ஜனாதிபதியும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் எடுத்த முயற்சி - இதுவரை கைகூடவில்லை. எனவே, தமது தற்போதைய நிறைவேற்று அதிகார நிலையில் தக்கவைத்துக்கொள்ள, ஜனாதிபதிக்கு மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டை ஏற்படுத்திகொள்வது சிறந்தது என்ற எண்ணம் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், சொந்தக் கட்சியின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்புக்கு மத்தியில், கட்சியின் வளர்ச்சியை விட்டுக்கொடுப்பதா? அல்லது தேசிய நலன் என்று கூறி மக்கள் விடுதலை முன்னணியுடன் கூட்டுச்சேர்வதா? என்ற சவால் - ஜனாதிபதிக்கு ஏற்பட்டுள்ளது.

இதற்கு ஜனாதிபதி எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் விடைகாணவேண்டியவராகியுள்ளார். அதேநேரம் இந்த மாதத்துக்குள் கூட்டமைப்பு ஏற்படாவிட்டால், மக்கள் விடுதலை முன்னணி கூட்டமைப்பு பேச்சிலிருந்து விலகியுள்ளது என எச்சரித்துள்ளமை, ஜனாதிபதியை மேலும் சிக்கலுக்குள்ளாக்கியுள்ளது.

மறுபுறத்தில் ஐக்கிய தேசியக்கட்சி ஜனாதிபதியின் சவால் விடுக்கும் வகையில் இக்கருத்துக்களை முன்வைத்து வருகிறது. பொதுத் தேர்தல் ஒன்றுக்கு நாடு தயாரில்லை என்ற போதிலும், 2001 ஆம் ஆண்டில் மக்கள் அளித்த அதிகாரத்தை மீண்டும் ஜனாதிபதிக்கு உணர்த்த, பொதுத்தேர்தல் ஒன்றுக்கு செல்லத் தயாரென ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது.

இந்த நிலையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூறுகிறது. இந்த நிலையில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்வைத் துள்ள இனப்பிரச்சினைத் தீர்வில், முஸ்லிம்கள் சார்பான யோசனைகளும் அமெரிக்க நலனுக்கு எதிரான ஐக்கிய தேசியக்கட்சிக்கு இந்தியத் தரப்பால் விடுக்கப்பட்டுள்ள அழுத்தம் என்றே கருதப்படுகின்றது.

ஏனெனில், அமைச்சர் ரவூப் ஹக்கீமின் யோசனைகள் - இந்திய மாநிலங்களின் அடிப்படையில் உருவானதாகவே கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கும் இந்தியாவுக்கு இதுவும் ஒரு சிறந்த வழியாகவே பயன்பட்டுள்ளதாக கருத்துக்கள் எழுந்துள்ளன.

## எகிப்திய பயணிகள் விமானம்

# செங்கடலில் வீழ்ந்தது; 148 பயணிகளும் பலி!

எகிப்தின் விமானக் கொம்பனிக்குச் சொந்தமான பிளாஸ் எயர் லைன் எனப்படும் விமானம் ஒன்று செங்கடலில் வீழ்ந்து நொருங்கிய போது, அவ்விமானத்தில் பிரயாணஞ்செய்த 148 பிரயாணிகளும் கொல்லப்பட்டதாக எகிப்தின் விமானசேவை தெரிவித்துள்ளது.

இந்த விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் விழுந்து நொருங்கியதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விமானத்தில் பிரயாணம் செய்தவர்களில் அநேகமானவர்கள் பிரான்ஸைச் சேர்ந்த உல்லாசப் பிரயாணிகள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த விமானம் பிரயாணத்தை ஆரம்பித்த சாம்எல்செய்க் எனும் பிரதேசத்தில் இருந்து 9 மைல்களுக்கு அப்பால் விபத்தில் சிக்கியிருந்தது. இந்த விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் ராடர் தொடர்பை இழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. உலகின் முக்கிய விமான நிலையங்கள் தீவிரவாதிகளின் தாக்குதல் பயமுறுத்தல்களால் விமானப் பிரயாணங்களை நிறுத்தியிருந்த வேளையில் இவ்விபத்து நிகழ்ந்துள்ளது.

ஆனால், எகிப்திய விமானப் போக்குவரத்து அமைச்சர் இச்சம்பவம் ஒரு விபத்து எனத் தெரிவித்துள்ளார். விமானம் புறப்பட்ட இடமான சாம் எல் செய்க் செங்கடல் பிரதேசத்தில் உல்லாசப் பிரயாணிகளுக்கு புகழ்பெற்ற இடம் எனவும் அரசியல் மாநாடுகள் இப்பிரதேசத்தில் நடை பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதனிடையே இங்கிலாந்தின் பிரதமர் ரொனிபிளயர் விடுமுறையை இப்பிரதேசத்தில் கழித்து வருவதாகவும், அவர் நலமுடன் இருப்பதாகவும் பி.பி.ஸி.தெரிவித்துள்ளது.

## காஷ்மீரில் நடைபெற்ற மோதல் நான்கு இந்தியப் படையினர் பலி!



இந்தியாவின் நிர்வாகத்துக்குட்பட்ட காஷ்மீர் பிரதேசத்தில் அமைந்துள்ள புகையிரத நிலையத்தில், காஷ்மீர் தீவிரவாதிகளுக்கும், பாதுகாப்புப் படையினருக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 4 பாதுகாப்புப் படையினரும் இரண்டு இஸ்லாமியத் தீவிரவாதிகளும் கொல்லப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் இஸ்லாமியத் தீவிரவாதிகள கறுப்புநிற மேலாடையும் காக்கிக் காற்சட்டையும் அணிநது பொலிஸார் போல் தோற்றமளித்ததாகவும், இவர்கள்மீது சந்தேகம் அடைந்து அவ்விடத்தில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் பின்தொடர்ந்து கண்காணிக்க முற்பட்டபோது, கிரனைட் தாக்குதலை தீவிரவாதிகள் மேற்கொண்டதாகவும், பின் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டதாகவும் இந்தச் சம்பவத்தில் காயமடைந்த அனில்குமார் என்ற எல்லைப் பாதுகாப்புப் படையைச் சேர்ந்த வீரர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

4 ஆண்டுகளின் பின் இந்தியப் பிரதமர் அடல்பிகாரி வாஜ்பாய் பிராந்திய உச்சி மாநாடு ஒன்றுக்கு செல்லவிருந்த நேரத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

உலக நோக்கு

### ஆஜென்ரீனாவின் தலைநகரில்

## வெடிபொருள் கடை தீப்பற்றி 5 பேர் பலி!

ஆஜென்ரீனாவின் தலைநகர் புயோனொஸ் ஏயாரெஷ் என்ற இடத்தில் சட்டவிரோதமான முறையில், வெடிபொருட்களை விற்பனை செய்த கடையொன்று தீப்பற்றிக் கொண்டதில் ஐந்து பொதுமக்கள் கொல்லப்பட்டும், 15 பேர் காயமடைநதுள்ளதாகவும், மேலும் ஐவர் காணாமற போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த தீ விபத்தினால் இரு மாடிக் கட்டடம் தகர்ந்துள்ளது, இதற்குள் சிக்கியவர்களை தீயணைக்கும் படையினர் மீட்கும் முயற்சியில் இறங்கியுள்ளனர்.

ஆஜென்ரீனாவின் பெரும்பாலான இடங்களில் வானவேடிக்கைகள் முக்கிய நிகழ்வாக இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது.



## ஈராக் பலூஜாவில்

# அமெரிக்க ஹெலி வீழ்வதற்கு தீவிரவாதிகளே காரணமாம்!

## அமெரிக்கப்படையினர் தெரிவிப்பு

அமெரிக்க அரசின் ஒ.எச் 58 என்ற ஹெலிகொப்ரர் பலூஜாவில் சுட்டு வீழ்த்தப்பட்டதற்கு தீவிரவாதிகளே காரணம் எனக் கருதியுள்ள அமெரிக்கப் படையினர் ஈராக்கின் தலைநகர் பாக்தாத்தின் மீது தொடர்ந்து குண்டுத் தாக்குதல்களை நடத்தியுள்ளனர். மேலும் ஆடலறி குண்டுகளின் ஒலி நகரில் எதிரொலித்தவண்ணம் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே ஹெலிகொப்ரர் சுட்டு வீழ்த்தப்பட்ட பகுதியை வான் படையினர் கண்காணித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், ஹெலிகொப்ரர் வீழ்ந்து நொருங்கிய பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணி நடைபெற்றுக்கொண்டிருந்ததாகவும், அவ் வேளையில் எறிகணையினால் தாக்கப்பட்ட, ஹெலிகொப்ரர் நிலத்தைநோக்கி வரு வதைக் கண்டதாக அவ்விடத்தில் கடமையில் ஈடுபட்டிருநத பொலிஸாரான முகமட் அப்துல் அஸிஸ் தெரிவித்துள்ளார்.

மேலும், அமெரிக்கப் போர் விமானங்களின் குண்டுத் தாக்குதல்களின் மத்தியில் தரையில் இருந்து ஆட்லறி தாக்குதல்களும் நடத்தப்பட்டதாக பி.பி.ஸியின் செய்தியாளர் கிறிசொக் பாக்தாத்தில் இருந்து தெரிவித்துள்ளார்.

இதனிடையே அமெரிக்கப் படையினரால் டிசம்பர் மாதப் பிற்பகுதியில் ஆரம்பிக்கப்பட்ட இரும்புப் பிடி என்ற போர் நடவடிக்கைகளில் இதுவரை 180 இற்கு மேற்பட்ட சந்தேகத்துக்கு இடமான தீவிரவாதிகள் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.



## ஈராக்கில் அமெரிக்க சிப்பாய் பலி!

ஈராக்கில் நேற்று நடத்தப்பட்ட மோட்டார் தாக்குதலில் அமெரிக்கப்படைவீரர் ஒருவர் கொல்லப்பட்டார்.

பாக்தாத் நகரில் இருந்து 50 கிலோமீற்றர் தொலைவில் உள்ள பலட் நகரில் உள்ள அமெரிக்க இராணுவத்தளம் மீதே தாக்குதல் நடத்தப்பட்டது. அமெரிக்கப்படை வீரர்களின் ஒய்வறை அருகே வீழ்ந்த ஷெல்லினால் ஒரு சிபபாய் பலியானார். மேலும் இருவர் காயமுற்றனர்.

## 8 நாட்களின் பின்னர் பெண் மீட்பு

ஈரானின் பாம் நகரில் பூமி அதிர்ச்சி நிகழ்ந்து எட்டு நாட்களின் பின்னர், கட்டட சிதைவுகளுக்குள் சிக்கியிருந்த 60 வயதான பெண் ஒருவர் நேற்று மீட்கப்பட்டார்.

மோப்ப நாய்களின் உதவியுடன் கண்டு பிடிக்கப்பட்ட இவரை மீட்புப் பணியாளர்கள் மூன்றுமணிநேர போராட்டத்தின் பின்னர் மீட்டனர். மீட்கப்பட்ட பெண்ணின் முகத்தில் மட்டும் சிறுகாயம் இருந்ததாகக் கூறப்படுகிறது.

## அமெரிக்காவுக்கான விமானப் போக்குவரத்து; பிரிட்டனால் இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது!

அமெரிக்காவின் தலைநகர் வாஷிங்ரனுக்கான விமானப் போக்குவரத்துக்களை பிரித்தானியா இடைநிறுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது.

சந்தேகத்தின்பேரில், இஸ்லாமியத் தீவிரவாதிகளின் பிரயாணங்கள் தடுக்கக்கூடியதாக உள்ளதாலேயே, மேற்படி விமான சேவையை இடைநிறுத்தியுள்ளதாக பி.பி.ஸி. செய்தி நிறுவனத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

சித்துனு விமானநிலையத்தில் இருந்து புறப்படும் விமானங்கள் இரண்டாவது நாளும் நிறுத்தப்பட்டுள்ளதுடன், சவூதிஅரேபியாவுக்கான விமானசேவையும் நிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை மீண்டும் இந்தச் சேவையினை ஆரம்பிப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன.

இதனிடையே, கடந்த புதனன்று பிரித்தானியாவிற்கும் சவூதி அரேபியாவிற்கும் இடையே நிறுத்தப்பட்டிருந்த விமான சேவைகளை மீண்டும் நாளை ஆரம்பிப்பது தொடர்பாக ஆராயப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அதிகரிக்கலாமென புலனாய்வுத் தகவல்கள் மூலம் அறிந்துகொண்ட பின்னரே-

பிரிட்டன் விமானப் பயணங்களை நிறுத்துவது என்ற முடிவுக்குவந்ததாகத் தெரியவருகிறது.

## உவர்சுற்றி எழுதுவது

"ஏழைக்கு எழுத்தறிவிப்பதைவிட தெருவில் குப்பை போடாதிருப்பது மேல"

''நன்று நன்று வீதியில் குப்பை போடாமை''

"கௌரவமானவர்கள் தெருவில் குப்பை கொட்ட மாட்டார்கள்"

இப்படியான புதிய பொன்மொழிகள், அறிவுரைகள் சில துண்டுக்கடதாசிகளில் அச்சுப் பதிப்பித்து 'சுவரில் ஒட்டப்பட்டிருக்கின்றன.

யாழ். நகரில், காங்கேசன்துறை வீதியில், பழைய கில்னர் கல்லூரியின் முன்பக்க மதிலில் இவை ஒட்டப்பட்டிருக்கின்றன. இந்தச் 'சுவர்த் தாள்'களினால் அந்த இடத்தில் குப்பை குவிவது குறைந்திருக்கிறதாம்.

சுவர்களில் எழுதுவது, கண்ட கண்ட அசிங்கமான வார்த்தைகள் எழுதுவதையும் ஊரில் சில உறவுகளைக் கண்டு பொறுக்கமுடியாத, வயிற்றெரிச்சலில் எழுதுவதை நான் சொல்லவில்லை. சில நாடுகளில் பெரிய புரட்சிகளுக்கும், சீர்திருத்தங்களுக்கும் இந்த "சுவர்ப் பத்திரிகைகள்'' வழிவகுத்திருக்கின்றன. சுவரில் எழுதுவதை (wall Papers) சுவர்ப்பத்திரிகைகள் என்றும் சொல்லப்பட்டதுண்டு.

சில வருடங்களுக்கு முன் சீனாவில் புதிய கிளர்ச்சிகள் ஏற்பட்டபோது, இந்தச் சுவர்ப் பத்திரிகைகள் பெரும்பங்கு வகித்திருந்தன.

நான் குப்பையில் தொடங்கி எங்கேயோ போய்விட்டேனென்று நண்பர் சுட்டிக்காட்டுகிறார்.

குப்பைகள் பெரும் பிரச்சினையாகத் தான் வளர்ந்து கொண்டிருக்கின்றன.

மேற்கு நாடுகளில் வீதிகளிலோ, பொது இடங்களிலோ ஒரு குப்பையைக்கூட கீழே காணமுடியாது.

ஜேர்மனியில் ஹம் என்றொரு கிராமத்தில்- கருங்கற்களால் ஒரு இந்துக் கோயில் அமைக்கப்பட்டிருக்கிறது. மிகப் பரந்த வெளியில் பெரிய கோயிலாக இது காட்சியளிக்கிறது. காளிதேவிதான் மூலவிக்கிரகம். இந்தக் கோயில் அமைக்கப்பட்டு முதல் கும்பாபிஷேகம் கடந்த வருடம் கோடைக் காலத்தில் நடந்தது.

கும்பாபிஷேகத்திருவிழாவுக்கு ஜேர்மன'யின் சில நகரங்களிலிருந்தும், பிரான்ஸ் போன்ற அயல் நாடுகளிலிருந்தும் சைவர்கள் பலரும் குடும்பமாக வந்திருந்தார்கள்.

கோயில் சைவக்கோயில், அங்கு தரிசிக்க வருபவர்களும் தமிழ்ச் சைவர்கள்தான் பெரும்பாலானவர்கள். இந்தக் கும்பாபிஷேகத் திருவிழாபற்றி லண்டன், பிரெஞ்சுத் தமிழ் வானொலிகளில் மட்டுமல்லாது, ஜேர்மன் வானொலிகளிலும் செய்திகள், பேட்டிகள் ஒலிபரப்பப்பட்டிருந்தன.

இந்தக் காளிகோயில் மூலம் நல்ல வருமானம் அப்பகுதி உள்ளூராட்சிச் சபைககுக் கிடைக்குமென்பதால், அதற்கு உள்ளூராட்சிச் சபையின் அனுமதியும் கிடைத்தது.

இந்தச் சந்தர்ப்பத்தை நமது தமிழ் வர்த்தகர்கள் விடுவார்களா? சாப்பாட்டுக் கடையும், சில்லறைக் கடைகளும், நொறுக்குத்தீன் கடைகளும் அமைத்து விட்டார்கள்.

வியாபாரம் ஓகோ என்று நடந்தது. சிறிது நேரத்தில் சாப்பாடு கட்டியிருந்த கடதாசிகள், நொறுக்குத்தீன்கள் சுற்றியிருந்த பேப்பர்கள் எல்லாம் காற்றில் அந்த இடம்முழுவதும் சுற்றிச்சுழன்று பறக்கத்தொடங்கிவிட்டன.

உள்ளூராட்சிச்சபை ஊழியர்களான வெள்ளைத் தோழர்கள் அங்குமிங்கும் ஓடி அவற்றைக்கூட்டி எடுத்துச் சேர்க்கப்பெரும் பாடுபட்டனர்.

அந்த இடத்தில் குப்பைகள் போடுவதற்கு கூடைகளும், தொட்டிகளும் வைக்கப்பட்டிருந்தன. ஆனாலும், அங்கு திரண்டவர்கள் நம்மவர்களல்லவா? பழக்கதோஷம விடுமா?

அந்தக் கும்பாபிஷேகத்துக்கு குடங்களில் தீர்த்தம் கொண்டு போனவர்கள் வெளளையர்கள். ஷேட், கோட், ரை கட்டி அதற்கு மேல் ஓம் என்ற எழுத்துப் பதித்த சால்வைகளைப் போர்த்தியபடி தீர்த்தக் குடங்களைத் தோளில் சுமந்து சென்றார்கள். அழகான காட்சி!

அங்கெல்லாம் வீடுகளில் சேரும் குப்பைகளும், தகரம், போத்தல், பிளாஸ்டிக், பேப்பர்கள் என்று தரப்படுத்தித் தெரிந்து அவற்றுக்குரிய குப்பைப் பெட்டிக்குள் போடவேண்டும்.

அந்தக் குப்பைகளும் பின்னர் வெவ்வேறு விதத்தில் பயன்படுத்தப்படுகின்றனவாம்.

ஜப்பானில் குப்பைகள் எல்லாம் ஓரிடத்திற்கு எடுத்துச்செல்லப்படுகின்றன. அங்கே இரண்டு பெரிய ஆலைகள் இருக்கின்றன. அவற்றில் குப்பைகள் சேர்க்கப்படுகின்றன. குப்பைகள் கொளுத்தப்படுகின்றன. அதிலிருந்து மின்சாரம் தயாரிக்கப்படுகிறதாம்.

புலமைப்பரிசிலில் இரண்டு மாதங்கள் ஜப்பான் சென்று திரும்பிய மட்டக்களப்பு மாநகர விசேட ஆணையாளர் ச.நவநீதன் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

கழிவுப்பொருட்களை நாம் எப்போது மீண்டும் பயனுள்ளவையாக்கப் போகிறோம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland




"பலாலி விமான நிலைய ஓடுதளத்தை புனரமைக்க இந்திய ஐநூறு மில்லியன் ரூபாய்களை ஒதுக்கீடு செய்துள்ளதாமே...."

"சோழியன் குடுமி சும்மா ஆடாது மணியம்"

"அப்ப இதுக்குப் பின்னால வேற ஏதாவது உள் நோக்கம் இருக்கென்று சொல்லுறியோ கனகு...."

"எல்லாம் காலம் செல்லச் செல்லத் தெரியும்.... இருந்து பார்...."

"முந்தி திருகோணமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவுக்கு கொடுத்தாங்கள்.... பிறகு கொழும்புத் துறைமுகத்தில அமெரிக்காவுக்கு இடங்கொடுத்தாங்க.... இனிமேல் திடீரென்று ஒரு நாள நாடாளுமன்றத்தையும் இந்தியாவுக்கோ, அமெரிக்காவுக்கோ.... அல்லது ஏதாவதொரு அதிகம் கடன்கொடுக்கிற நாட்டுக்கு குத்தகைக்கோ, ஏன் மொத்த விலைக்கோ கொடுத்தாலும் ஆச்சரியப்பட முடியாது...."

"அப்ப ஜனாதிபதி.... பிரதமர் எல்லாம் என் செய்வினம்....?"

"இப்பமட்டும் அவை பேருக்குத்தான் ஜனாதிபதி.... பிரதமர் அவர்களை இயக்கிறதெல்லாம் ஆரோ என்று அரசியல் நோக்கர்கள் கூறுகிறார்கள் தெரியாதா?"

"என்னமோ எனக்கொன்றும் விளங்கவில்லை.... நாடு எங்கே போகுது என்று தெரியேலை....!"

"நாடு எங்க போகுதோ என்னவாகுதோ என்று உனக்குத்தான் கவலை.... ஆட்சிபீடத்தில இருக்கிறவைக்கு அதைப் பற்றிய சிந்தனையே இல்லை.... அவைக்கு அவை இருக்கும் பதவியும்.... அவைக்கிருக்கும் அதிகாரமும்தான் முக்கியம்...."

"தேசியம் பேச்சில் மட்டும்தான்.... நாடு சர்வதேசிய மயமாக்கப்பட்டு வருதைப் பற்றி ஆருக்கு அக்கறை....?"

"பாவம் இலங்கை மாதா"

தெருவாசி

# மேலும் 100 எரிபொருள் நிலையங்களை இந்திய நிறுவனத்துக்கு விற்கத் தீர்மானம்!

(கொழும்பு)

மேலும் நூறு எரிபொருள் நிரப்பு நிலையங்களை இந்திய நிறுவனத்திற்கு விற்பனை செய்ய அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

இந்தியாவிலுள்ள சுயாதீன பெற்றோலிய சந்தைப்படுத்தல் நிறுவனத்துக்கே இந்த நூறு எரிபொருள் விற்பனை நிலையங்களும் விற்கப்படவுள்ளன.

750 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு இந்த எரிபொருள் நிரப்பு நிலையங்களை வாங்க இந்த நிறுவனம் இது தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்தாக்கப்பட்டதும் நிர்வாகத்தைக் கையேற்கும் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே இந்திய நிறுவனம் ஒன்றுக்கு நூறு எரிபொருள் நிரப்பு நிலையங்களை அரசாங்கம் விற்றிருந்தது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், 450 எரிபொருள் நிரப்பு நிலையங்களை நாடு முழுவதும் பராமரித்து வந்தது.

இவற்றில் 200 எரிபொருள் நிலையங்களை இந்திய நிறுவனங்களுக்கு விற்பனை செய்துவிட்டு, 250 நிலையங்களை மட்டுமே தம்வசம் வைத்திருக்கத் தீர்மானித்திருக்கிறது.

இதேவேளை - ஏற்கனவே விற்கப்பட்ட நூறு எரிபொருள் நிலையங்களுக்கான கொடுப்பனவை அந்த நிறுவனம் முழுமையாக செலுத்தவில்லை என்று அரசாங்க வட்டாரங்களை மேற்கோள்காட்டும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையங்களை கொள்வனவு செய்த நிறுவனம் 300 மில்லியன் ரூபாவை மட்டுமே செலுத்தியிருப்பதாகவும் 450 மில்லியன் ரூபாவை இன்னமும் செலுத்தவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## காரைநகரில் மணிவாசகர் விழா

காரைநகர் மணிவாசகர் சபையினால் 49 ஆம் ஆண்டு மணிவாசகர் விழா இன்று ஈழத்துச் சிதம்பர தேவஸ்தான வசந்த மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நல்லை திருஞானசம்பந்தன் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்வு தொடர்ந்து மூன்று தினங்கள் நடைபெறும். இன்றைய நிகழ்வில் முன்னாள் மாவட்ட நீதிபதி விகடகவி மு. திருநாவுக்கரசுவின் சொற்பொழிவு இடம்பெறும் எனவும், காரைநகர் மணிவாசகர் சபையினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஒன்பது கம்பனிகளாகும் இலங்கை மின்சாரசபை!

இலங்கை மின்சாரசபை ஒன்பது கம்பனிகளாக அடுத்த வாரம் முதல் பிரிக்கப்படவிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் எட்டாம் திகதி முதல் ஒன்பது நிறுவனங்களாக மின்சார சபை இயங்கவுள்ளது. இவற்றுள் இரண்டு நிறுவனங்கள் மின்சார உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபடும். ஒரு நிறுவனம் வடக்கிலும், நாட்டின் ஏனைய பகுதிகளில் நான்கு நிறுவனங்களும் செயற்படவுள்ளன.

இவ்வாறு ஒன்பது பிரிவுகளாக மின்சாரசபை பிரிக்கப்படுவதால் மின் கட்டணங்கள் அதிகரிக்கப்படுவதற்கு வாய்ப்புகள் இருப்பதாக மின்சாரசபை தொழிற்சங்கங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

# நீரின் வற்வரி அதிகரிப்பு கட்டணங்களும் உயரும்!

இந்த வருடத்திலிருந்து நீருக்கான பெறுமதி சேர்க்கப்பட்ட வரி அதிகரிக்கப்பட்டுள்ளதால் நீர் கட்டணங்கள் அதிகரிக்கப்படுமென தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபை அறிவித்துள்ளது.

நீர் கட்டணத்தில் இதுவரை அறவிடப்பட்ட 10 வீத வரி 15 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் பொது முகாமையாளர் தெரிவித்தார்.

நாட்டில் குழாய் நீரைப் பயன்படுத்தும் 80 வீதமான மக்கள் மாதாந்தம் 20 ஆயிரம் லீற்றர் நீரைப் பயன்படுத்துகின்றனர். இவர்களின் நீர் கட்டணங்கள் பெறுமதி சேர்க்கப்பட்ட வரியினால் 5 வீதமாக அதிகரிக்கப்படுமென அறிவிக்கப்படுகிறது.

வழமையாக நீரைப் பயன்படுத்துபவர்களை விட, புதிதாக பயன்படுத்த முற்படுவோரின் நீர் வரிவீதம் இவற்றை விட மேலும் அதிகரிக்கப்படலாமென அறிவிக்கப்படுகிறது.

## நல்லுறவை....

நேற்றுமுன்தினம் சந்தித்தார். இதன் போதே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

கிண்ணியா, தோப்பூர், குச்சவெளி, நிலாவெளி ஆகிய பிரதேசத்திற்கும் இரு தரப்பிலும் தலா நான்கு பேர் கொண்ட குழுக்கள் அமைக்கப்பட்டன.

தமிழ் - முஸ்லிம் மக்களிடையே முறுகல் நிலை ஏற்படும் பகுதிகளில் இக் குழுக்கள் சுமுக நிலையைத் தோற்றுவிக்க நடவடிக்கை எடுப்பதாக இக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

# தபால் சேவை கட்டணங்கள் அடுத்த மாதம் அதிகரிப்பு!

(கொழும்பு)

நிதியமைச்சு தபால் சேவைக் கட்டணங்களை அடுத்தமாதம் அதிகரிக்க எண்ணியுள்ளதனை தபால் திணைக்களம் கடுமையாக விமர்சித்துள்ளது.

இதுதொடர்பாக மேலும் தெரிய வருவதாவது. நிதியமைச்சினால் உள்ளூர் வெளியூர் தபால் கட்டணங்களை அடுத்த மாதம் அதிகரிக்க உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. அதன்படி உள்ளூர் தபாற் கட்டணம் ஐந்து ரூபாவாகவும், மற்றைய கட்டணங்களும் குறிப்பிட்ட அளவில் அதிகரிக்கப்படவுள்ளது.

இந்தக் கட்டண விபரங்களை கடுமையாக விமர்சித்துள்ள தபாற் திணைக்களம் இது ஒரு மோசமான முடிவென தெரிவித்துள்ளது. அத்துடன் பெருமளவான மக்கள் தபாற் சேவையையே பயன்படுத்துகிறார்கள். இதற்கு காரணம் அவர்களது நாளாந்த வாழ்க்கையில் இந்த தபாற்சேவை அத்தியாவசியமான ஒரு தொடர்பூடகமாகும். எனவே இவ்வாறான அதிகரிப்பு மக்களைப் பெரிதும் பாதிக்கும் எனவும் அது தெரிவித்துள்ளது.

## பொலிஸ் அதிகாரிகளின்...

லத்தில் ஏற்படாது என நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த இரண்டு தசாப்த காலமாக பொலிஸ் அதிகாரிகள் சட்டம் ஒழுங்குகளை கடைப்பிடிப்பதற்குத் தவறியுள்ளனர். பொலிஸ் திணைக்களம் யுத்தத்திற்கு முகம்கொடுத்து கடமையாற்றி வந்ததினால் தாம் யுத்த சூழலில் கடமையாற்றி வந்தோம் என கூறுகின்றனர்.

ஆனால், தற்போது எமது நாட்டில் சமாதான நிலை தோன்றியுள்ளது. யுத்த சூழ்நிலையில் இருந்து நாம் விடுபட்டுள்ளோம். இன்றைய சமூகத்தில பொதுவான நிலையில்லை.

இதன் காரணத்தால் நாம் அனைவரும் இணைந்து சமூகக் கட்டமைப்புக்களை முன்னெடுக்கும் செயற்பாட்டில் ஈடுபடவேண்டும்.

அவ்வாறில்லாது நாம் மீண்டும் எமது சமூகத்தினை யுத்த சூழலுக்கு இட்டுச்செல்லக் கூடாது. பொலிஸ் காவலரண்கள் அமைக்கப்பட்டபோது, பெரும்பாலும் பொதுமக்களின் தேவை கருத்திற் கொள்ளாமலேயே அமைக்கப்பட்டன.

யுத்த காலத்தில் பொலிஸாருக்கு ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் காரணமாகவே பொலிஸார் படையினர் என்ற நிலைக்கு மாறினர். இதனால் பொலிஸார் பொதுமக்களிடம் இருந்து முற்றாக விலகிக் கொள்ளவேண்டிய நிலை ஏற்பட்டது என அவர் மேலும் தெரிவித்தார்.

## சமாதான...

பூஜை இன்று ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

சமாதான ஒப்பந்தம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு, சிறப்பாக முன்னெடுத்து செல்வதற்கும், சமாதான செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளவர்களின் கவனம் திரும்பவேண்டும் எனவும் - இலங்கைத்தீவில் நிலையான சமாதானம் நிலவவேண்டும் என்ற நோக்குடனுமே இந்த விசேட பூஜை செய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## அமெரிக்கப் பாதுகாப்பு...

ஐரோப்பிய யூனியனுடன் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் அரசாங்கத்திடம் இருந்து ஜனாதிபதி சந்திரிகாவினால் மூன்று முக்கிய அமைச்சுக்கள் பொறுப்பேற்றப்பட்ட பின்னர் நாட்டில் அரசியல் நெருக்கடி உச்சம் பெற்றது. அத்துடன் விடுதலைப்புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை முனனெடுப்பதிலும் பாரிய சிக்கல்கள் தோன்றியிருந்தன.

அமெரிக்கா சென்றிருந்த மிலிந்த மொறகொட தற்போதைய அரசியல் நெருக்கடி தொடர்பாகவும், சமாதானப் பேச்சுக்களை முன்னகர்த்திச் செல்ல இயலாமைக்கான காரணம் தொடர்பாகவும் அமெரிக்கப் பிரதிப் பாதுகாப்பு செயலாளரான றிச்சர்ட் ஆர்மிடேஜை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இதன்பின்னர் ஜனாதிபதி சந்திரிகா அரசியல் நெருக்கடியை முடிவுக்குக் கொண்டுவந்து விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆர்மிடேஜ் கேட்டிருந்தார்.

தன்னால் சமாதான முயற்சிகள் பாதிக்கப்படவில்லை எனவும், ஆர்மிடேஜின் கூற்றுக்கள் தவறானவை எனவும் ஜனாதிபதி சந்திரிகா நிராகரிப்பதாகவும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் தற்போது அமெரிக்கப் பாதுகாப்புச் செயலர் கொலின் பவல் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் கடிதங்களை அனுப்பி வைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## சார்க்...

வல்கள் அமைச்சர் ரிரோன் பெர்ணான்டோ தலைமை தாங்கினார்.

இந்த அமைச்சர்கள் கூட்டத்தில் வறுமையை ஒழிப்பதற்கான ஆசிய சுயாதீன ஆணைக்குழுவின் அறிக்கை கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது. சார்க் பிரஜைகள் நாடுகளின் வறுமைகள் தொடர்பான விபரங்களை அமைச்சர்கள் மட்டக் கூட்டத்தில் சார்க் மாநாட்டின் செயலாளர் நாயகம் சமர்ப்பித்தார்.

இந்த மாநாட்டுக்கு பின்னர் இலங்கையில் நடைபெறவுள்ள அமைச்சர்கள் கூட்டத்தில் இந்த விபரங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ்...

நெருங்கிப்பழகியதனாலேயே மேஜர் ஜெனரல்களான ஆனந்த ஹமங்கொட, சுசந்த மெண்டிஸ் மற்றும் லரி விஜேரட்ண ஆகியோர் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இவரது முறைப்பாட்டினை உறுதிப்படுத்திய போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் யாழ். அலுவலகம் இந்த முறைப்பாடு தொடர்பாக தாம் விசாரணை நடத்தவுள்ளதாக தெரிவித்ததாகவும் அந்த கொழும்பு ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது.

பொதி விநியோக சேவையில்
TNT யின் பொங்கல் விசேட தள்ளுபடி.
20% விசேட கழிவு
தைப்பொங்கலை முன்னிட்டு சர்வதேச கூரியர் சேவை, சர்வதேச தபால் சேவை, உள்நாட்டுக் கூரியர் சேவைகளுக்கு 20% சிறப்புத்தள்ளுபடியினை வழங்குகின்றோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
TNT கூரியர் சேவை
487, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
021-2223771
0777-270452
(சீ-2025)
நாங்கள் உங்கள் அன்பளிப்புப் பொருட்களை மட்டுமல்ல அவற்றோடு உங்கள் அன்பினையும் எடுத்துச் சென்று சேர்க்கின்றோம். இவ்விசேட சலுகை பொங்கல் திருநாள் வரை மட்டுமே.

A/L 2006
ஜனவரி 10
காலை 8 மணி
(கலை வர்த்தகப் பிரிவுகள்)

| | | | |
|---|---|---|---|
| கணக்கீடு | D.SAM | தமிழ் | மீரா |
| வணிகக் கல்வி | பசில | இந்து நாகரிம் | ஜோதீஸ்வரன் |
| பொருளியல | இராஜேஸ்வரன் | அளவையியல | மோகன் |
| பொது உளச்சார்பு | தவசேகர் | புவியியல் | இக்னேசியஸ் |
| ஆங்கிலம | சுதர்சன் | கிறீஸ்தவம | மல்லிகா |
| | | நாடகமும் அரங்கியலும் | சந்திரன் |

D.M.I
யாழ்.நகர்
(சீ-2022)

## மஹஜன சம்பத பெறுபேறுகள்

சீட்டிழுப்பு இல: 1578 திகதி: 02.01.2004

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Y | 5 | 5 | 6 | 7 | 5 | 9 |

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 04.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.